1054

கர ஸூ
ஆனிமீ

ஸ்ரீ:

ஸம்புடம் 10
ஸஞ்சிகை 6

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால் மாதந்தோறும்
ப்ரசுரமாகும்

ஸ்ரீ [illegible] துப்பத்ரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JUN 1951

ஸம்பாதகர்;

P. S. ஸ்ரீநிவாஸதேசிகாசார்யர் M.A., B.L., சிரோமணி.

(அட்வொகேட்)

ப்ரசுரிக்குமிடம்

நெ. 2. ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம், சென்னை—7.

[illegible]ந்தா
[illegible]—0

தனிப்பிரதி விலை 0-4-0

~~MAY~~ 1951
VOL. 10. NO. 6

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1.	ஸ்ரீபாஷ்யத்தில் ஓர் ஸந்தேஹம்	... 160
2.	உபயவேதாந்த ஐககண்ட்யம்	... 164
3.	பாதுகாஸஹஸ்ரம்	... 168
4.	ஓர் வைராக்ய நிதி	... 172
5.	ஸதுபதேசம்	... 176
6.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	... 180
7.	தான் ஆட்பட்டதையுகக்கும் தண்டமிழ் வேந்தன்	... 181
8.	புயலும் பொறுமையும்	... 182
9.	சாப்பாட்டுச்சண்டை	... 185
10.	செய்தி	... 188
11.	ஸம்பாதகரின் குறிப்புகள்	... 189
12.	புஸ்தகங்கள்வரவு	... 190

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

மணியார்டர் பாரத்தில் **கூபனின் பின்புறத்தில்** பணம் அனுப்புவோரின் விலாஸத்தை எழுத இடம் விடப்பட்டிருக்கிறது. ஆயினும் பல சந்தாதாரர்கள் அதில் தங்கள் விலாஸத்தை எழுதுவதில்லை. இதனால் பணம் அனுப்பியது யாரென்று தெரிந்துகொள்ளமுடியாமல் போகிறது. கூபனின் பின்புறத்தில் சரியான முறையில் முழுவிலாஸத்தையும் எழுதினால் எங்களிடமுள்ள விலாஸத்தையும் அதன்படி திருத்திக்கொள்ள ஸௌகரியமுண்டு. மணியார்டர் பாரத்தின் முன் புறத்தில் விலாஸம் எழுதப்பெற்ற பாகம் தபாலாபீஸுக்கே போய் விடுவதால் **கூபனின் பின்புறத்தில்** விலாஸத்தை எழுதவேண்டியது மிக அவசியம். ஆகையால் சந்தாதாரர்கள் மறவாமல் கூபனில் தங்கள் சந்தா நம்பரையும் அதன் பின்புறத்தில் தங்கள் முழு விலாஸத்தையும் எழுதியனுப்பவேண்டுமெனக் கோருகிறோம்.

மானேஜர்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 10 } கர ஹூ ஆனி மீ { ஸஞ்சிகை 6

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபதஸக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

[பீஷ்மோபாக்யாந பூர்வகமாய்]

ஸ்ரீபாஷ்யத்தில் ஓர் ஸந்தேஹம்

இக்ஷ்வாகுவம்சத்தில் மஹாபிஷக் என்று ஒரு அரசனிருந்தான். அவன் அநேக அச்வமேதங்களையும், ராஜஸூயங்களையும் அநுஷ்டித்து கீர்த்திமானாய் முடிவில் ஸ்வர்கத்தை யடைந்தான்.

ஒரு காலவிசேஷத்தில் தேவதைகளுடன் கூட ஸத்யலோகத்தில் நடக்கும் ப்ரஹ்ம ஸபைக்குப் போய்ச்சேர்ந்தான். அந்த ஸபைக்கு எல்லா தேவதைகளும், ரிஷிகளும், அப்ஸரஸுக்களும், நதிகளுக்குள் ச்ரேஷ்டையான கங்கை முதலானவர்களும் வந்திருந்தார்கள். ஸபை நடந்துகொண்டிருக்கும் போது தென்றல்காற்றுவீசி மிகவும் ஸூக்ஷ்மமான கங்கையினுடைய வஸ்த்ரத்தை அபகரித்துக்கொண்டு போய்விட்டது. அப்பொழுது தேவதைகளெல்லோரும் தலையைக் குனிந்துகொண்டார்கள். மஹாபிஷக் என்னும் அரசனானவன் லஜ்ஜையைவிட்டு கங்கையைப் பார்த்திருந்தான். அப்பொழுது காமபரவசனான அந்த அரசனானவன் ப்ரஹ்மாவினால் பார்க்கப்பட்டு

'𑌉𑌤𑌶𑍍𑌚 𑌜𑌾𑌤𑍋 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍇𑌷𑍁
𑌪𑍁𑌨𑌰𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿।
𑌯𑌯𑌾 𑌹𑍃𑌤𑌮𑌨𑌾𑌶𑍍𑌚𑌾𑌸𑌿
[illegible] ॥
𑌸𑌾 𑌤𑍇 𑌵𑍈 𑌮𑌾𑌨𑍁𑌷𑍇 𑌲𑍋𑌕𑍇
𑌵𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌾𑌚𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿।
𑌯𑌦𑌾 𑌤𑍇 𑌭𑌵𑌿𑌤𑌾 𑌮𑌨𑍍𑌯𑍁𑌃
𑌤𑌦𑌾 𑌶𑌾𑌪𑌾𑌦𑍍𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇॥'

[நீ மநுஷ்யலோகத்தில் பிறந்து மறுபடியும் ஸ்வர்க்கத்தை யடையப்போகிறாய். எந்த கங்கையாலே துர்புத்தியான உன் மனம் அபஹரிக்கப் பட்டதோ அவளே உனக்குக் க்லேசகரமான கார்யங்களைப் பண்ணப்போகிறாள். எப்பொழுது உனக்கு சோகமுண்டாகிறதோ அப்பொழுதுதான் சாபவிமோசனம்] என்று சொல்லப்பட்டான்.

பிறகு அவன் பூலோகத்தில் சந்த்ரவம்சத்திலுண்டான ப்ரதீபனென்கிற ராஜாவுக்கு ஶாந்தனு என்னும் குமாரனாய்ப் பிறந்தான்.

கங்கையானவள் ஸபையிலிருந்து திரும்பி வரும்போது, வழியில் துக்கிதர்களாய் வரும் அஷ்ட வஸுக்களைப்பார்த்து, 'ஓவஸுக்களே! நீங்கள் இந்தக் கஷ்டத்தை அடைந்ததற்கு காரணம் என்ன?' என்றுகேட்க, அவர்களும் 'ஓ கங்கையே! நாங்கள் ஒருகாலத்தில் மேருவின் தாழ்வரையில் 'ஆபவர்' என்றும் 'வஸிஷ்டர்' என்றும் பெயரையுடைய வருண புத்ரரான மஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு விஹாரார்த்தமாய்ப் போனோம். அங்கு அவர் தபோபலத்தாலே அடைந்த காமதேநுவின் பெண்ணான நந்தினியானவள் புல்லை மேய்ந்து கொண்டு நின்றனள். அதைப்பார்த்து 'த்யு' என்னும் வஸுவின் பத்நியானவள் தன் பர்த்தாவைப் பார்த்து 'ஓ ஸ்வாமிந்! இந்த பசுவைப்பாரும், என்ன அழகாய் இருக்கிறது; மடியைப்பாரீர் எவ்வளவு பெரியதாய் இருக்கிறது' என்று சொன்னாள். அதைக் கேட்ட த்யு என்னும் வஸுவானவர் 'ஓ நாயகியே! இந்த பசுவானது ரூபத்தாலும், குணத்தாலும் ஸர்வோத்க்ருஷ்டமாய் இருப்பதுமாத்ரமன்று.

'𑌅𑌸𑍍𑌯𑌾𑌃 𑌕𑍍𑌷𑍀𑌰𑌂 𑌪𑌿𑌬𑍇𑌨𑍍𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌃
𑌸𑍍𑌵𑌾𑌦𑍁 𑌯𑍋 𑌵𑍈 𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌮𑍇।
𑌦𑌶𑌵𑌰𑍍𑌷𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿
𑌸 𑌜𑍀𑌵𑍇𑌤𑍍 𑌸𑍍𑌥𑌿𑌰𑌯𑍌𑌵𑌨𑌃॥'

[இந்த பசுவினுடைய மிகவும் ருசியுள்ளதான பாலை எந்த மநுஷ்யன் சாப்பிடுகிறானோ

அவன் ஸ்திரமான யௌவநத்தோடு பதினாயிரம் வர்ஷம் ஜீவித்திருப்பன்] என்று சொன்னார். அதைக்கேட்டு அவருடைய பத்நியானவள் 'ஓ ஸ்வாமின்! பூலோகத்தில் உசீநரஸ் என்னும் ராஜரிஷிக்கு 'ஜிதவதீ' என்று ஒரு பெண்ணிருக்கிறாள். அவள் ரூபத்தாலும், குணத்தாலும் லோகத்தில் ப்ரஸித்திபெற்றவள். அவள் எனக்கு மிகவும் ப்ரியமான தோழி. அவளை இதன் பாலினால் தீர்க்க யௌவநமுள்ளவளாகப் பண்ணக் கடவீர். இதைக் காட்டிலும் எனக்கு வேறு ப்ரியதமமில்லை' என்றுசொல்ல, அதைக்கேட்டு த்யு என்பவர் எங்களோடுகூடி ரிஷியின் தபஸ்ஸை நினையாமல் அந்தபசுவைத் திருடிக்கொண்டு போய்விட்டார். பின்பு ரிஷி ஜபாதிகளை முடித்துக்கொண்டு ஆச்ரமத்திற்கு வந்து பார்க்க தேநுவைக் காணாமல் தேடி, பின் யோக த்ருஷ்டியால் வஸுக்களால் கொண்டுபோகப் பட்டாள் என்று அறிந்து கோபிஷ்டராய்:—

'யஸ்மாந்மே வஸவோ ஜஹ்ரு:
காம் தோக்த்ரீம் ஸுவாலதிம் |
தஸ்மாத் ஸர்வே ஜநிஷ்யந்தி
மாநுஷேஷு ந ஸம்ஶய: ||'

[எனக்கு ஹிதகரையான பசுவை அபஹரித்த வஸுக்கள் ஸம்சயமில்லாமல் மநுஷ்யர்களாகப் பிறக்கக் கடவர்கள்] என்று சபித்துவிட்டார். பின்பு நாங்கள் சென்று நல்ல வார்த்தைச் சொல்லி க்ஷமாபணத்தை ப்ரார்த்தித்தும் அவர் தயை பண்ணாமலே போய்விட்டார். ஆனால் த்யு என்பவர் மாத்ரம் சிரகாலம் பூலோகத்தில் வஸிக்க வேண்டியது என்றும் மற்ற ஏழு பேர்களுக்கும் சீக்ரத்திலேயே வஸுபதப்ராப்தி யுண்டாகுமென்றும் சொல்லிவிட்டார். ஆகையால், நாங்கள் சோகித்துக்கொண்டிருக்கிறோம். மனுஷ்யர்கள் வயிற்றில் பிறப்பது எங்களுக்கு ஸரியன்று. நீ மனுஷ்ய ஸ்த்ரீயாக ரூபத்தை எடுத்து ப்ரதீபராஜன் புத்ரனான ஶாந்தனுவை யடைந்து எங்களைப் பெற்று வருஷந்தோறும் ப்ரவாஹத்தில் விட்டுவிடக் கடவாய்' என்று சொன்னார்கள். கங்கையும் 'அப்படியே ஆகட்டும்' என்று ஒப்புக்கொண்டு வந்துவிட்டாள்.

பின்பு ஒருகாலத்தில் ஶாந்தனு வேட்டையாடி கங்காதீரத்தில் உலாவி நிற்கும்போது கங்கையானவள் அதிமாநுஷமான ரூபத்தை எடுத்துக்கொண்டு அரசன் முன் நின்றாள். அரசனும் அவளைப் பார்த்து மோஹித்து காமாவிஷ்டனாய், 'ஓ பெண்ணே! நீ யார் தேவதையோ? கிந்நரியோ? கந்தர்வப்பெண்ணோ? நாககந்நிகையோ? நீ ஏகாகிநியாய் இங்கு இருப்பதற்குக் காரணம் என்ன? நீ எனக்கு பார்யையாகக் கடவை; என்னுடைய ராஜ்யமும், ப்ராணனும், தநமும் உன்னுடைய அதீந'மென்று சொல்ல, கங்கையும் வஸுக்களுடைய ஸமயபந்தத்தையும், ப்ரஹ்மாவினுடைய ஶாபத்தையும்நினைத்து, 'ஓ ராஜனே! உமக்கு நான் பார்யை யாவதில் ஸந்தேஹமில்லை; ஆனால் நான் சுபமாகவோ, அசுபமாகவோ, ப்ரியமாகவோ, அப்ரியமாகவோ எந்தக் கார்யத்தைச் செய்தாலும் அதை நீயாவது உன்னைச் சேர்ந்தவர்களாவது மனத்தாலும் குற்றமாக நினைக்கக்கூடாது. அதுவிஷயத்தில் என்னைக் குறித்து அப்ரியமான ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாது. நான் செய்யும் கார்யத்தை தடுத்தாலும் அப்ரியமான வார்த்தையைச் சொன்னாலும் அன்றையதினமே ஸம்சயமில்லாமல் உன்னை விட்டுவிடுவேன்' என்றாள். அரசனும் அதற்குஒப்புக்கொண்டு ரதத்தில் ஏற்றி ஊருக்குக்கொண்டுவந்து அவளுடன் ஸர்வவிதமான காமபோகங்களையும் அநுபவித்து வந்தான்.

சிலகாலம் கழிந்த பிறகு கங்கைகர்ப்பிணியாய் வர்ஷங்கள்தோறும் புத்ரர்களைப் பெற்று அதுகளை உடனே கங்கா ப்ரவாஹத்தில் போட்டுவந்தாள். அரசனும் அந்த வ்யாபாரம் தனக்கு அநிஷ்டமாய் இருந்தபோதிலும் அவளுடைய வியோகத்தில் பயத்தாலே அவளை ஒன்றும் சொல்லாமலிருந்துவிட்டான். இப்படி ஏழு ப்ரஸவங்களை அவள் கொன்றுவிட்டாள். பின்பு எட்டாவது ப்ரஸவகாலத்தில் அரசன் ஸமீபத்தில் வந்து பார்க்க, அவளும் முன்போல அந்த சிசுவையும் கங்கையிற் போட யத்தநித்தவளவில் அரசன் பார்த்து மிகவும் துக்கத்தோடு 'குழந்தையைக் கொல்லாதே; நீயார்? எவனுடைய பெண்? எதற்காகக் குழந்தைகளைக் கொல்லுகிறாய்? ஓ புத்ரஹத்திபண்ணுகிற

வளே! இந்த புத்ரஹத்தியாலே நிந்திக்கப்பட்ட மஹாபாபங்களை ஸம்பாதித்துவிட்டாய்' என்று சொன்னான்.

அதைக் கேட்டு கங்கையும் 'ஓ புத்ரகாமியான அரசனே! இனி உன் பிள்ளையைக் கொல்லுகிறதில்லை; நான் முதலில் சொல்லியபடி இத்துடன் உன் க்ருஹத்தில் வாஸமும் எனக்கு முடிந்துவிட்டது; நான் ஸமஸ்தரிஷிகளாலும் கொண்டாடப்பட்ட ஜஹ்நு புத்ரியான கங்கை; ஶாபவிசேஷத்தை யநுஸரித்து தேவகார்யார்த்தமாக இங்கு வந்தேன். இந்த எட்டுபேர்களும் அஷ்டவஸுக்கள்; ஆபவருடைய ஶாபத்தாலே உன் புத்ரர்களாக அவதரித்தார்கள்; அதில் இந்த குழந்தை த்யு என்னும் வஸு; இவன் சிரகாலம் பூலோகத்திலிருக்கப் போகிறான்; இந்த குழந்தையை அழைத்துக்கொண்டு போகிறேன்; நீர் நினைக்கும்போது மறுபடி வந்து சேருகிறேன்' என்று சொல்லி அவ்விடத்திலேயே குழந்தையுடன் மறைந்து போய்விட்டாள்.

பின்பு ஶாந்தனு ராஜனானவன் வெகுகாலம் நன்றாக ராஜ்யத்தை பரிபாலனம் பண்ணிக்கொண்டு வந்தான். ஒருநாள் வேட்டையாடிக்களைத்து கங்காநதியின் கரையிலுள்ள வநத்தில் இளைப்பாறி சங்கையை வந்து பார்த்தான். அதில் ப்ரவாஹம் குறைந்திருப்பதையும், நாலு பக்கங்களிலும் பாணங்கள் பின்னல் பின்னலாக விழுந்திருப்பதையும்கண்டு, இப்படி கங்கையில் ப்ரவாஹமில்லாமலிருப்பதற்கும் இவ்விடத்தில் அகாரணமாக பாணங்கள் நிறைந்திருப்பதற்கும் காரணமென்னவென்று யோசித்து கங்கையை நினைத்தான். கங்கையும் தன் புத்ரனுடனே அரசன்முன் வந்துநின்றாள். அரசனும் வெகுகாலமாய்விட்டபடியால் முன் அநுபவித்திருந்தபோதிலும் சடக்கென அவளைத் தெரிந்து கொள்ளமுடியாமல் யோசித்து நிற்க, கங்கையும், 'ஓ ராஜனே! எந்த எட்டாவது பிள்ளையை விட்டுவைத்தீரோ அவன்தான் இந்த குமாரன்; வஸிஷ்டரிடத்தில் ஸாங்கமாக வேதாத்யயநம் பண்ணினான்; அஸ்த்ரங்களில் நிபுணன்; தநுர்வேதத்தில்நிஷ்ணாதன்; யுத்தத்தில் தேவேந்த்ரனுக்குத் துல்யன்; தேவதைகளும் கொண்டாடும்படியான பராக்ரமமுடையவன்; புத்தியில் சுக்ரனுக்கும் தேவகுருவிற்கும் ஸமானமானவன்; ஜாமதக்ந்ய ராமனுக்குத் தெரிந்த தநுர்வித்யையனைத்தும் இவனுக்குத் தெரியும்; இவனையழைத்துக்கொண்டு ஸுகமாய் ராஜ்யம் போய் சேரு'மென்று சொல்லிவிட்டு அவ்விடத்திலேயே மறைந்துபோய் விட்டாள். பின்பு ஶாந்தனுவும் புத்ரனுடன் ஹஸ்தினாபுரத்திற்கு வந்து யௌவராஜ்யத்தில் புத்ரனை அபிஷேசம் பண்ணிவைத்து அவனுடன்கூட தர்மம் வழுவாமல் ராஜ்யத்தைப் பரிபாலநம் பண்ணிக்கொண்டுவந்தான்.

பின்பு ஒருக்கால் ஶாந்தனு வேட்டையாடிக்கொண்டு யமுனையின் கரையிலுள்ள காட்டிற்குப் போய்ச்சேர்ந்தான். அங்கு அதிமாநுஷமான ஒருவாஸனை வீசக்கண்டு இந்த வாஸனைக்குக் காரணமென்னவென்று யோசித்து நாலுபக்கத்திலும் பார்க்கும்போது அவ்விடத்தில் நீண்டு கறுத்து விஶாலமான கண்களோடு கூடியும், அப்ஸரஸுக்கு துல்யையான ஒரு பெண்ணைப் பார்த்தான். உடனே அவளருகில் சென்று 'ஓ பெண்ணே! நீ யார்? எவனுடைய பெண்?' என்று கேட்டான். அவளும், 'ஓ ராஜனே! நான் உச்சைச்ரவஸ் என்கிற வேடராஜன் பெண். அவனுடைய நியோகத்தாலே தர்மார்த்தமாக ஓடத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறேன்' என்று சொன்னாள். அரசனும் அதைக்கேட்டு காமபரவசனாய் வேடராஜனிடம் போய் கந்நிகையை விவாஹம் பண்ணிக்கொடுக்கும்படி கேட்டான். வேடராஜனும், 'ஓ ராஜனே! ஜாதமாத்ரைவ தேயா வராய வரவர்ணிநீ' (பெண் எப்பொழுது உண்டாயிற்றோ அது அவச்யம் ஒருவனுக்குக் கொடுக்கப்படவேண்டியதே) அதிலும் உமக்கு ஸமமான வரம் இந்தலோகத்தில் கிடையாது. எனக்கு ஒரு அபிப்ராயம் உண்டு. அதை ஸத்யவாதியான நீர் ஒப்புக்கொண்டால் கொடுப்பதில் ஸந்தேஹமேயில்லை' என்று சொன்னான். அரசனும் அதைக் கேட்டு 'ஓ வேடராஜனே! உன் அபிப்ராயத்தை நீ சொல்லு; அது ஒப்புக்கொள்ளக்கூடி

யதானல் ஒப்புக்கொள்கிறேன். இல்லாவிடில் ஒப்புக்கொள்ள முடியாது' என்று சொல்ல, வேடராஜனும் 'இவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கு ராஜ்யம் கொடுப்பதானல் பெண்ணை கொடுக்க ஸந்தேஹமில்லை' என்றான். ஶாந்தனுவும் அதற்கு ஒப்புக்கொள்ளாமல் தேரில் ஏறிக் காமபரவசனாகவே ராஜ்யத்திற்கு வந்துவிட்டான். பின்பு ஸத்யவதீ என்னும் வேடப்பெண்ணை நினைத்து காமபாதந்த்ரனாய் க்லேசமடைந்து ராஜ்ய தந்த்ரத்திலும் ஊக்கமற்றிருந்தான். அவனப்படி யிருப்பதைக் கண்டு காங்கேயரானவர் ஒருநாள் அவரிடம் போய் ப்ரதக்ஷிண, ப்ரணாம, அபிவாதந புரஸ்ஸரமாக நியமித்த ஆஸநத்தில் உட்கார்ந்து, 'ஓ ராஜனே! உம்முடைய ஸர்வ ராஜ்யத்திலும் க்ஷேமம்; ராஜாக்களெல்லோரும் கீழ்படிந்தே யிருக்கிறார்கள். அப்படி யிருக்க மனத்தில் க்லேசமென்ன? என்னுடனும் முன்பு போல வார்த்தை யளிப்பதில்லையே இதற்குக் காரணம் என்ன? ஏதாவது வ்யாதியோ? வேறு காரணமோ? எதுவானலும் அதை அவச்யம் அருளிச் செய்யவேண்டு'மென்று கேட்க, ராஜனும் வேடபுத்ரியினிடத்தில் தனக்கு உண்டான ஆசையைச் சொல்ல லஜ்ஜிதனாய் மறைத்து ஒரு வார்த்தைச் சொல்லுகிறான்.

'ஓ தேவவ்ரதனே! நீ சொல்லுகிறபடி மனத்தில் எனக்கு ஒரு க்லேசமுண்டாயிருக்கிறது. அதுவென்னவெனில்:— நான் நீ மிகவும் பராக்ரமசாலியாய், தநுர்வேதபாரங்கதனாய், யுத்தாபிலாஷியாய், அர்த்தசாஸ்த்ரத்திலும், ராஜ்யதந்த்ரத்திலும் அஸத்ருசனாய் இருக்கிறாய் என்பதைப்பற்றி மிகுந்த ஸந்தோஷமுடையவனாயும், நூறு பிள்ளைகள் இருந்தபோதிலும் உனக்கு துல்யமாகமாட்டார்கள் என்கிற நிச்சயம் உடையவனாயும் இருந்துவருகிறேன். மஹத்தான நம் பரதவம்சத்திற்கு நீ ஒருவனே வ்ருத்திக்குக்காரணமாய் இருக்கிறாய். உனக்கு ஒரு ஆபத்துவரில் குலமில்லை.

'𑌅𑌨𑌪𑌤𑍍𑌯𑍈𑌕𑌪𑍁𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌂
𑌇𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑍍𑌧𑌰𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ।
𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍇𑌕𑌂 𑌚 𑌪𑍁𑌤𑍍𑌰𑌶𑍍𑌚
𑌅𑌸𑍍𑌤𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌚 𑌭𑌾𑌰𑌤! ॥
𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌨𑌾𑌶𑍇 𑌤𑌨𑍋𑌰𑍍𑌨𑌾𑌶𑌃
𑌪𑍁𑌤𑍍𑌰𑌨𑌾𑌶𑍇 𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌃 ॥'

[லோகத்தில் தர்மம் தெரிந்தவர்கள் ஒரு பிள்ளையிருப்பதும் பிள்ளையில்லாமலிருப்பதும் ஸமமாகவே சொல்லுகிறார்கள். ஒரு கண்ணிருப்பதும் ஒரு பிள்ளையிருப்பதும் இல்லாதது மாதிரியே. கண்போனல் சரீரம் க்ஷயித்துப் போம். புத்ரன் போனல் குலம் நசித்துப் போம்.] என்று சொல்லுகிறார்கள். ஆகையால் நீ ஏகபுத்ரனாய் இருப்பதினல் க்லேசப்படுகிறேன். ஸந்தாநார்த்தமாக மறுபடி விவாஹம் பண்ணிக்கொள்ள அதிகமான திருப்தியில்லை' என்று சொன்னான். அதைக்கேட்டு இங்கிதஜ்ஞனான தேவவ்ரதன் ராஜாவின் ஸாரதியை யழைத்து 'ஓ ஸூதனே! என் பிதா புத்ரநிமித்தமான சில வார்த்தைகளைச் சொல்லுகிறார். அவருக்கு எந்த யிடத்திலாவது ஆசை உண்டோ?' என்று கேட்க ஸூதனும் வேடப்பெண்ணிடத்தில் அரசன் ஆசைக் கொண்டதையும், வேடராஜனைச் சென்று கேட்டதையும், அவன் சொன்ன வார்த்தையையும், அரசன் அதற்கு ஒப்புக் கொள்ளாமல் வந்துவிட்டதையும் விஸ்தாரமாய்ச்சொல்லிவிட்டான்.

(தொடரும்)

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவின் சந்தாவைப் பலர் க்ரமப்படி முன்பணமாக அனுப்பிவருகிறார்கள். சில அன்பர்கள் 1952-ம் வருஷத்திற்குக் கூட சந்தாவை முன்னதாகவே அனுப்பியிருக்கிறார்கள், நீங்கள் பாக்கியில்லாமல் அனுப்பிவிட்டீர்களா? இல்லாவிட்டால் உடனே அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

உபயவேதாந்த ஜகஙண்ட்யம்

[10-வது ஸம்புடம் 3-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A., B. L., அட்வோகேட், திருச்சி.]

இங்கே ஸர்வசூந்ய வாதமென்னும் மாத்யமிக பௌத்த மதத்தை 2-ம் அத்யாயத்தில் 2-ம் பாதத்தில் ஸர்வதாநுபபத்த்யதிகரணத்தில் நிரஸித்ததை விளக்குவதாக ஆறாயிரமும் ஈடும் விளக்கியுள்ளன: ‘சூந்யவாதத்தை நிராகரிப்பது’ என்று ஆறாயிரம். இங்கே ஆறாயிர ஸ்ரீஸூக்திகள் மேற்கண்ட அதிகரணத்தின் ஸ்ரீபாஷ்யத்தைத் தமிழ்செய்ததேயாகும். ‘பாஷ்யத்திலே சூந்யவாதியை நிரஸித்த க்ரமத்திலே’ என்று ஈடு. அந்த வ்யாக்யாநங்கள் காட்டிய மார்க்கத்தில் இன்னும் பல மதங்களையும் இப்பாசுரத்தில் நிரஸிப்பதாக ஸ்வரஸமாய்ப் பொருள் ஏற்படுகிறது. இங்கே முக்யமாகக் காட்டும் யுக்தி ‘பாவாந்தராபாவ’ வாதத்தை மூலமாகக் கொண்டதென்று ப்ராசீந வ்யாக்யாநங்கள் காட்டியுள்ளன. இங்கே ஸ்ரீபாஷ்யமும் இப்பாசுரத்தை மூலமாகக் கொண்டதாக ஈடு விளக்குகிறது. ‘இவ்வாழ்வார் தாமடியாக பாஷ்யகாரருக்கு அவனை (சூந்ய வாதியை) நிரஸிக்கலாம்’ என்று ஈடு. ‘லோகத்தில் பாவாபாவ சப்தங்களும் பாவாபாவ ப்ரதீதிகளும் வித்யமாந வஸ்துவினுடைய அவஸ்தாவிசேஷ கோசரமாகக் காண்கையாலே ஈச்வரன் உளனெனில் ஸ்தூலசிதசித்விசிஷ்டனாய் இருக்கும் என்று சொல்லிற்றாய் வரும். ஈச்வரன் உளனலன் எனில் ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்டனாய் இருக்குமென்று சொல்லிற்றாய் வரும்’ என்று திருவாறாயிரம்.

‘உளனெனில்’ என்பது ஈச்வரனுக்கு மட்டுமல்ல; ஈச்வரன் தவிர மற்றைப் பொருள்களும் உளவா? இல்லையா? என்ற விகல்பத்திற்கு விஷயமென்பதை ‘இப்படி ஈச்வர வ்யதிரிக்த பதார்த்தங்களையுமுளவெனில் இவையும் ஸ்தூலசிதசித் விசிஷ்டங்களாய்க்கொண்டு உளவென்று சொல்லிற்றாய் வரும். ஈச்வர வ்யதிரிக்த பதார்த்தங்களை இல்லை என்னிலும் அவை ஸூக்ஷ்மசிதசித் விசிஷ்டங்களென்று சொல்லிற்றாய் வரும். அந்தந்த ஸ்தூலஸூக்ஷ்ம ரூப பதார்த்தங்களும் அவனுக்கு ரூபமாய் இருக்கும்’ என்று விளக்கிற்று. இப்பாசுரத்தில் பின்பாதி இச்கருத்தை நன்கு விளக்குகிறது. முன்பாதியில் கூறியதைப் பின்பாதியில் உபஸம்ஹாரம் செய்வதாயும், ‘உளனென இலனென இவைகுண முடைமையில்’ என்பதற்கு ‘ஸ்தூலஸூக்ஷ்மலக்ஷண இரு தர்மங்களின் ஸம்பந்தம் வர்ணிக்கப்படும்பொழுது’ என்றும், ‘இருதகைமையோடு’ என்பதற்கு ‘...ஶரீரகதயா’ என்றும் ஒன்பதினாயிரம் ஸாதித்தது. நாமரூபவத் வஸ்து ப்ரகாரகத்வமும் நாமரூபமற்ற வஸ்துப்ரகாரகத்வமுமாகிற இரண்டு ஸ்வபாவங்களோடே கூடி உளன்’ என்று ஸாக்ஷாத் ஸ்வாமி. ‘ஸதஸத்வக்ருதே:’ ‘ஸத் தென்றும் அஸத் தென்றும் இரண்டுவித ப்ரதீதிகளுக்கும் விஷயமாய் இருப்பதால்’ என்று ஸாராவளியின் ஸங்க்ரஹம். மாயாவாதத்தில் சேதநாசேதந ப்ரபஞ்சம் இல்லை என்று சொல்வது ‘ப்ரளயகாலத்தில் இல்லை’ ‘ஸகல’ என்று சொல்லலாம்படி நாமரூபப் பிரிவில்லாமல் ப்ரஹ்மத்தோடு ஒன்றாயிருப்பதைக் கொண்டு நாமும் ஒருவாறு ஒப்புவதே. ப்ரளயமில்லாத தற்காலத்திலும் அதை யில்லையென்று சொல்லுவது ப்ரஹ்மத்தைவிட்டு எவ்விதத்திலும் பிரிக்கக்கூடிய தனித்த பொருளாயில்லை, அவன் உருவமாகவே யவை யுளவென்கிற நம் ஸித்தாந்த ரீதியில் நாமும் ஒருவாறு ஒப்புவதே. ‘சிதசித் ப்ரக்ருதிகள் இரண்டோடும் நித்யமும் விசிஷ்டனாயிருப்பதே ஈச்வரத்தன்மை’ என்று

ஶாங்கர கீதாபாஷ்யத்தில், இவ்விரண்டும் தனக்கு ப்ரக்ருதிகளென்று 13-வது அத்யாயத்தில் 19 வது ச்லோகத்தின் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தையே கீதா ஸித்தாந்தமென்றும் தம் ஸித்தாந்தமென்றும் விளக்கியுள்ளதை முன்பே காட்டியுள்ளோம். பௌத்தர்களின் க்ஷணிகவாதத்தில் முன் க்ஷணத்திலிருந்த பொருள் தன் உருவத்தை அடுத்த க்ஷணத்தில் அதன் ஸ்தாநத்தில் வரப்போகும் பொருளில் ஸமர்ப்பித்துவிட்டு, அப்படி ஸமர்ப்பிக்கப்பட்ட முன்பொருள் உருவத்தோடு அடுத்தக்ஷணத்தில் உத்பத்தியாகிறதென்று சொல்லுவதும் முன்பின் க்ஷணங்களில் ஒரே வஸ்து அவஸ்தா பேதங்களோடு சில மாறிய ப்ரகாரங்களோடு இருந்துவருகிறதென்பதிலேயே பர்யவஸிக்கும். முன் க்ஷணத்தோடு அந்த வஸ்து அடியோடு நாசமடைந்து கேவலம் அபாவத்திலிருந்து புதிதாக அதன் ஸ்தாநத்தில் அதுபோன்ற புதுப்புதுவஸ்து ஸந்தாநமாக உத்பத்தியாய்க்கொண்டே வருகிறதென்று சொல்லுவதும் இதில்தான் பர்யவஸிக்குமென்பதை வைபாஷிக ஸௌத்ராந்திக பௌத்த மதவிஷயமான, ‘ப்ரதிஸங்க்யா ப்ரதிஸங்க்யா நிரோதா⁴ப்ராப்திரவிச்சே²தா³த்’ என்ற ஸூத்ரத்தில் ‘ஒரு பொருளுக்கு உத்பத்தி விநாசமென்பவை ஒரே பொருள் மற்றோர் அவஸ்தையை யடைவதேயாகும். வேறுவேறு அவஸ்தைகளையுடைய ஒரு த்ரவ்யமே அவஸ்தை வேறானாலும் ஸ்திரமாயுள்ளது’ என்று விளக்கப்பட்டது. ஜைநர்கள் ஒருவஸ்துவிற்கே ஒரேகாலத்தில் அஸ்தித்வம் நாஸ்தித்வம் முதலிய பல விருத்த தர்மங்கள் இருப்பனவாகக் கூறுவது பொருந்தாது. காலபேதத்தால் ஒருபொருளுக்கே இப்பாசுரத்தில் ஸாதிக்கும் விதத்தில் அஸ்தித்வ நாஸ்தித்வாதி தர்மங்கள் பொருந்தலாம். ‘நைகஸ்மிந்நஸம்ப⁴வாத்’ என்கிற ஸூத்ரத்திற்கு ‘யுக³பதே³கஸ்மிந் ஸத³ஸத்த்வம்’ என்று பொருளென்று ஸ்ரீபாஷ்யத்தில் கூறப்பட்டது. ஸூத்ரகாரர் ச்ருதிகளில் இப் ப்ரபஞ்சமெல்லாம் அஸத்தாகவே இருந்ததென்று சொல்வதற்கு ‘அஸத்வமென்பதே நாமரூபப் பிரிவற்று வ்யக்தமில்லாத தசையைக் (தர்மத்தை) காட்டுகிறதென்று ‘அஸத்³வ்யபதே³ஶாந்நேதி சேந்ந த⁴ர்மாந்தரேண’ என்ற ஸூத்ரத்தில் விளக்கியதையும் இப்பாசுரம் ஸூசிக்கிறது. ஈச்வரனையாவது மற்ற ஜகத்தையாவது ‘உளன்’ ‘உளது’ என்று ஸர்வசூந்யவாதி சொல்லாவிடினும் அவன் ஸர்வ கார்யங்களையும் ப்ரவர்த்திப்பிக்கும் ஈச்வரனில்லை யென்று வாய் திறந்து பேசினால் அவன் இல்லை யென்று பேசுமிவனும் இவனுடைய இல்லைச்சொல்லும் இவனுக்கும் இவன் பேச்சுக்கும் இவன் புத்தி ப்ரவ்ருத்திக்கும் காரணமாயிருக்கும் ஓர் பொருள் இவன் மூலமாகப் பேசுவதையே ஸ்திரப்படுத்தும். ‘யேந வாக³ப்⁴யுத்³யதே ததே³வ ப்³ரஹ்மத்வம் வித்³தி⁴’ என்றது கேநோபநிஷத்து. ‘உளன்’ ‘உளது’ என்று சொல்லுமவர்கள் அஸ்திபேச்சால் எப்படி ஈச்வர ஜக³த³ஸ்தித்வம் த்ருடப்படுமோ அப்படியே அதற்கு மேலும் நாஸ்திகர் நாஸ்திகப் பேச்சால் த்ருடப்படுத்தியதாகுமென்று முதலடிக்கு ஆழ்வார் கருத்தென்பதை,

“அதஃ ஸர்வம் ஶூந்யமிதி ப்ரதிஜாநதா ஸர்வம் அஸ்தீதி ப்ரதிஜாநதேவ ஸர்வஸ்ய விஶேஷ்யஸ்யாவஸ்தா²விஶேஷோ யோऽபி தைவ ப்ரதிஜ்ஞாதா ப⁴வதீதி ப⁴வதாபி ததா² த³ர்ஶிதா நகாஸ்தித்வவிஸித்³தி⁴’,

என்று ஸ்ரீபாஷ்யத்தில் விளக்கினர். ‘இலனெனில்’ என்பதற்கு ‘இல்லை’ என்று வாய் திறந்து பேசினானாகில் என்று பொருள். பாசுரத்தின் முடிவில் ‘இலன்’ ‘இலது’ என்று சொல்வது ஸர்வத்ர விச்சேதமில்லாமல் முழுவதும் வ்யாப்தனாயிருப்பதையே ஸ்தாபிக்கிறதென்பதை ‘ஒழிவிலன் பரந்தே’ என்ற நிகமநத்தால் அழகாக ஸாதிக்கிறார். ‘எங்குமிலன்’ என்று தகப்பன் சொன்னதற்கு ப்ரதியாக ‘எங்குமுளன் கண்ணன்’ என்று மகன் உறுதி கூறியதையும், அந்த தத்வத்தை ஸத்யமாக்குவதற்காக அவதாரம் செய்ததையும் இப்பாசுரம் ஸூசிக்கிறது.

'ஸர்வத்ராஸி ஸதா³ஸி' என்று ப்ரஹ்லாதர் அறுதியிட்டதையும் ஸூசிக்கிறது. 'உள னிருதகைமையோடு, என்பதால் 'தத்த்வமஸி' 'ஸர்வம் க²ல்வித³ம் ப்³ரஹ்ம' முதலிய இடங்களில் ஒன்றாக ஸமாநாதிகரணமாக சேதநா சேதநங்களையும் ப்ரஹ்மத்தையும் ச்ருதிகள் கூறுவதினால் ஏற்படும் ஸாமாநாதிகரண்யத்திற்கு இரண்டு தகைமைகளாகிய இரண்டு ப்ரகாரங்களோடு கூடியுள்ள ஒரே பொருளை விளக்குவதில் நோக்கு என்பதை விளக்குகிறார். 'ப்ரகாரத்³வயவிஶிஷ்டைகவஸ்துபரத்வம் ஸாமாநாதி⁴கரண்யஸ்ய' என்கிற ஸ்ரீபாஷ்யாதி ப்ரதர்ஶநங்களுக்கு இது ஆழ்வார் மார்க்கதரிசியாகக் காட்டிய வழி. இதுவே ஶாப்திகரும் 'பி⁴ந்நப்ரவ்ருத்திநிமித்தாநாமேகஸ்மிந்நர்தே² வ்ருத்தி:' என்று காட்டிய வழி.

பத்தாம்பாட்டு

பரந்ததண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்
பரந்தவண் டமிதென நிலவிசும் பொழிவற
கரந்தசி லிடந்தோறும் மிடந்திகழ் பொரு
டோறும்
கரந்தெங்கும் பரந்துள னிவையுண்ட கரனே.
[திருவாய்மொழி 1-1-10.]

இங்கும் அடுத்த பாசுரத்திலும் ப்ரஹ்மத்தின் அத்யந்த ஸூக்ஷ்மத் தன்மையால் எங்கும் ப்ரதிகாதமில்லாமல் தட்டுத் தடங்கவில்லாமல் தனக்குக் கொஞ்சமேனும் இடஞ்சல் முதலியன இல்லாமல் எவ்வளவு அல்பமான பொருள்களுக்குள்ளும், பரந்த அண்டத்தில் ஒருவன் உள்ளிருந்து வஸிப்பதுபோல் உள்ளே வஸிக்கும் வ்யாப்தி ஸௌசர்யத்தையும் 2-ம் அத்யாயத்தின் 3, 4 பாதங்களின் அதிகரணவிஷயங்களையும் 3-வது அத்யாயத்தில் ப்ரஹ்மத்திற்கு மேற்பட்ட பரன் இல்லை யென்றும், 'பரமத: ஸேதூந்மாநஸம்ப³ந்த⁴பே⁴த³வ்யபதே³ஶேப்⁴ய:' என்ற ஸூத்ரத்தாலும் 'ததா²ந்யப்ரதிஷேதா⁴த்' என்கிற அதன் முன் ஸூத்ரத்தாலும் 'யஸ்மாத்பரம் நாபரமஸ்தி கிஞ்சித்³யஸ்மாந்நாணீயோ ந ஜ்யாயோऽஸ்தி கஶ்சித் | வ்ருக்ஷ இவ ஸ்தப்³தோ⁴ தி³வி திஷ்ட²த்யேக:

[illegible]' என்கிற முண்டக ச்ருதியையும் 'அந்தர்ப³ஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி²த:' 'நித்யம் விபு⁴ம் ஸர்வக³தம் ஸுஸூக்ஷ்மம்' முதலிய ச்ருதிகளையும் அநுஸரித்து, ஸர்வஸ்மாத்பரன் பராத்பரம் என்று நிர்ணயித்திருப்பதையும் இன்னும் பல விஷயங்களையும் விளக்குகிறார். 'பத்தாம் பாட்டிலே வ்யாப்தி ஸௌகர்யத்தையருளிச்செய்தார்' என்று ஈடு. ஸத்வித்யையில் 'ஸ ய ஏஷோऽணிமைததா³த்ம்யமித³ம் ஸர்வம்' என்று எல்லாவற்றிலும் ஸூக்ஷ்மமாய் இருப்பதால் அது எல்லாவற்றுக்குள்ளும் ஆத்மாவாய் இருக்க ஸுகரமாகிறதென்ற ரஸத்தை ச்ருதி காட்டிற்று. எது அணிமையோ அந்த பரப்ரஹ்மமே பூமா என்று ஸத்வித்யையும் பூமவித்யையும் சேர்ந்து காட்டும் ரஸம். 'அணோரணீயாந் மஹதோ மஹீயாந்' என்ற ச்ருதியும் இந்த ரஸத்தைக் காட்டிற்று. வாமனனே த்ரிவிக்ரமனாய் ஓங்கி உலகளந்த அவதார வ்ருத்தாந்தமும் இத்தத்வத்தை ஓர் பகவதவதாரத்தாலேயே விளக்குவது. 'வ்யாப்திம் ச பூ⁴தேஷ்வகி²லேஷு சாத்மந: ஸத்யம் விதா⁴தும்' என்று எல்லாப்பொருள்களிலும் வ்யாப்தி உண்மையென்று உலகமறியக் காட்ட ந்ருஸிம்ஹாவதாரம் நடிக்கப்பட்டது போல. 'ஸ ய ஏஷோऽணிமைததா³த்ம்யமித³ம் ஸர்வம் தத்ஸத்யம்' என்று திரும்பவும் திரும்பவும் ச்ருதி அறுதியிட்டதை உலகமறிய ப்ரகாசிப்பித்தது அவ்வவதாரம். மஹாபூதங்களின் க்ரமத்தை ஆதரியாமல் இங்கே 'தா ஆப:' என்று ச்ருதியிலும் 'ஆப:' என்று ஸூத்ரத்திலும் பன்மையாகக் குறிக்கப்பட்ட பின்னான ஜல தத்வத்தை இங்கே முதலில் 'பரந்ததண் பரவையுள் நீர்தொறும்' என்று எடுத்ததில் மிக்க ரஸமுண்டு. பகவானுக்கு ஸமுத்ரசாயித்வம் அஸாதாரணமான லிங்கம். 'அம்ப⁴ஸ்ய பாரே பு⁴வநஸ்ய மத்⁴யே நாகஸ்ய ப்ருஷ்டே²' என்றும், '[illegible]' முதலிய ச்ருதிகளிலும் ஸ்ம்ருதி காவ்யாதிகளி

னும் இது ப்ரஸித்தம். ‘ஜஹஸூஜஜெ௨ாவ ஷெஶாஜ’ என்கிற அதிகரணத்திலும் இந்த ஸமுத்ரத்தில் ஶயநம் செய்வது அஸாதாரணமான விஷ்ணுலிங்கமென்று காட்டப்பட்டதாக ஸ்ரீமத்வபாஷ்யம். இங்கே பாற்கடலும் ‘தண்பரவை’ என்பதால் குறிக்கப்படுகிறது. க்ஷீராப்தி ஶயநமும் ச்ரிய:பதிக்கு அஸாதாரணமான அடையாளம். மஹாஸமுத்ரத்தில் ஶயநித்திருப்பதில் எவ்வளவு ஸௌகர்யமோ, அதுபோலவே அத்யந்த நுட்பமான அந்த ஸமுத்ரத்திவலைகளொன்றொன்றிலும் அதே ஸௌகர்யத்தோடு எழுந்தருளி வ்யாபித்திருப்பதைக் காட்டுவதற்கும், ஸமுத்ரத்திலும் பாற்கடலிலும் ஶயநித்திருப்பதாக ஸர்வத்ர ப்ரஸித்தியைக் காட்டவும் ‘யொzஸ்வு திஷ்ட₂ந்’ ‘ஜஹெzஹு:’ என்றும், ‘யஸ்ஸெவஷு ஹெதெஷு திஷ்ட₂ந்’ என்றும் ஸர்வத்திலும் அந்தர்யாமியாயுள்ள நாரயணன் தேவன் என்பதைக் காட்டுவதற்கும் ‘ஜஸ்வு’ என்று ச்ருதியிலிருக்கும் பஹுவசநம் நியதபஹுவசநமாயிருந்தாலும் அப்பென்னும் மஹாபூதத்தில் ஒவ்வொரு திவலையிலும் வ்யாபித்து நியமிப்பதைக் காட்டுவதற்கும் ‘பரந்ததண்பரவை’ என்று பாடுவதுபோலும். அத்துடன் பகவானுடைய ஸஹஜஸ்வபாவம் ஶைத்யமே; அதில் உஷ்ணம் வருவது ப்ராணிகளுடைய வினைகளால்தான் என்றும், அப்படி நடுவேநடுவே உஷ்ணம் வருவதும் அவர்களைத் திருத்துவதென்கிற குளிர்ந்த எண்ணத்தாலேயே யென்றும் காட்டுவதும் இப்படி முதலில் நீரை எடுத்ததின் ரஸம். ‘தண்’ என்னும் ஶைத்யமே அவருடைய வ்யாபகமான பரந்த ஸ்வபாவம். அவர் கடல் வண்ணன். நிலத்தில் வஸிப்பவர் மநுஷ்யர்; அவர்கள் ஜலத்தினுள் வஸிக்க ஸமர்த்தரல்லர். ஸமுத்ரத்தில் வாஸம் செய்யும் மனுஷ்யரில்லை. பூமியில் வஸிப்பதுபோல ஜலத்திலும் அவர் வஸிப்பவர். அந்தரிக்ஷம் விஷ்ணுபதம். எல்லா மஹாபூதங்களிலும் அவற்றினுள்ள அத்யல்பமான ஒவ்வொரு பாகங்களிலும் பெரியது சிறியதென்கிற பேதமின்றிப் பூரித்து உள்ளவர். ‘ஸவபூதகெஷு வஸ்தெ₂:’ என்று இப்பாசுரம் ஸங்க்ரஹிக்கப்பட்டது.

இப்படி அசேதந தத்வங்களில் ஒவ்வொன்றிலும் வ்யாபித்துள்ளதைப்பாடி ‘திகழ் பொருள் தொறும்’ என்று ஸ்வப்ரகாசமான எல்லா ஜ்ஞாத்ரு ஜ்ஞாந தத்வங்களிலும் வ்யாபித்திருப்பதையும் பாடுகிறார். ‘திகழ்’ என்பது ஸ்வயம்ப்ரகாசமான ஜீவராசிகளையும், நித்யவிபூதி முதலிய ஸ்வயம்ப்ரகாச வஸ்துக்களையும் குறிக்கும். ‘இடந்திகழ்’ என்பதற்கு சரீரத்தில் ப்ரகாசிக்கும் ஜ்ஞாநாநந்தமான ஆத்மதத்வங்கள் என்றும் பொருளுரைக்கப்பட்டது. இப்படி வ்யாபித்திருக்கையிலும் வ்யாபிக்கப்பட்ட ஜடராசிகளால் எப்படி அறியப்படுகிறதில்லையோ, அப்படியே, ‘யம் ஆத்மா ந வெட₃’ என்றபடி சேதநராலும் அறியப்படுகிறதில்லை என்று ச்ருதி காட்டியதை ‘கரந்து’ என்பதால் ஸூசிக்கிறார். ‘திகழ்பொருள்’ என்று ‘யொ விஜ்ஞாநெ திஷ்ட₂ந் யம் விஜ்ஞாநம் ந வெட₃’ என்ற ச்ருதி சாகாபாடத்தில் விஜ்ஞாநமென்று ஜீவனுக்குப் பெயர் இருப்பதையும் ஸூசிக்கிறார்.

‘இவையுண்டகரனே’ என்று இந்தப்பரந்து விரிந்த தசையில் அந்தர்யாமியாக எல்லாவற்றிலும் பூர்ணமாக வ்யாபித்துள்ள தத்வமே ப்ரளயாபத்தில் இவ்வனைத்தையும் தன் வயிற்றில் ஸௌகர்யமாய் வைத்துக்கொண்டு தான் த்ருடமாய்க் காத்திருப்பதைக் காட்டுகிறார். ஸூக்ஷ்மமான ஜட பரமாணுக்களைக்கொண்டு ஜகத்து அவற்றின் ஸங்காதமாக ஈச்வரனால் சேர்க்கப்படுகிறது. அந்த ஜகத்து முழுவதிலும் ஈச்வரன் ஸம்யுக்தனாய்மட்டுமிருக்கிறான்’ என்றுவைசேஷிகர்ஒப்புவரேயொழியஒவ்வொன்றிலும் உள்ளே ஆத்மாவாக இருந்து அந்தர்யாமி விக்ரஹ விசிஷ்டனாய் நியமிப்பதை அவர்கள் ஒப்புவதில்லை. இது வேதாந்தத்திற்கு அஸாதாரணமான கொள்கை.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

பாதுகாஸஹஸ்ரம்

(ஸௌஜந்யபரிமளம்)

[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம், திருமலைதாதாசார்ய ஸ்வாமி M.O.L.. திருப்பதி.]

இப்போது 'கவிகேஸரித்வ ஸம்வலிதமான வேதாந்தாசார்யத்வபலமாக பாதுகாஸஹஸ்ரம் அவதரித்த வ்ருத்தாந்தத்தைப்பற்றிக் கொஞ்சம் பேசுவோம்:—

ஸந்த: ஸ்ரீரங்கப்ருத்வீச
சரணத்ராணசேகரா: |
ஜயந்தி புவநத்ராண
பதபங்கஜரேணவ: ||

ஸ்ரீரங்கநாதனுடைய திருவடியைக் காக்கும் பாதுகையை சிரஸ்ஸில் தரிப்பவர் உண்மையறிந்தவர். இவர்களுடைய திருவடித் தாமரையினுடைய தூளி உலகத்தைக் காக்கும்.

எப்படி?

ஜயதி யதிராஜஸூக்தி:
ஜயதி முகுந்தஸ்ய பாதுகாயுகளீ |
ததுபயதநாஸ்த்ரிவேதீம்
அவந்த்யயந்தோ ஜயந்தி புவி ஸந்த: ||

உலகங்களைப்படைத்த ஸர்வேச்வரன் அவை முழுவதும் காடாந்தகாரம் சூழாதபடி நித்யமாக ப்ரகாசிக்கக்கூடிய வேதசாஸ்த்ரமாகிற ஸூர்யனையும் படைத்துவைத்தான். உலகத்தோருடைய மனக்கண்ணின் தோஷத்தால் அது பயன்படாது நின்றமையைக்கண்டு வ்யாஸமஹர்ஷி ப்ரஹ்மஸூத்ரமாகிற ஒரு ஸித்தாஞ்ஜநம் செய்து உபகரித்தார். துருபயோகத்தால் அதுவும் நிஷ்பலமாயிற்று. பிறகு அண்ணலிராமனுசனின் ஸ்ரீஸூக்தி யவதரித்து அதன் உபயோகமார்க்கத்தைச் செவ்வனே திருத்திக்காட்டி இத்துறையில் நின்ற மற்ற நூல்களுக்கெல்லாம் மிகமிக மேம்பட்டு விளங்காநின்றது. அப்படி நிற்கவே வேதசாஸ்த்ரத்தின் கருத்துப்பொருள் இதுவென்றும் அதுவென்றும் பலவிதமாய்த் தோன்றினதொழிந்து அவற்றுக்கெல்லாம் மேம்பட்டதாக உண்மைக் கருத்துப்பொருள் விளங்காநின்றது. அதுதான் எதுவெனில் முகுந்தனுடைய பாதுகையிணை.

இப்படி யதிராஜஸூக்தியால் வ்யாக்யாதமான ப்ரஹ்மமீமாம்ஸையாகிற வேதாந்த தர்க்கம் ஸஹகரிக்க வேதாந்த சாஸ்த்ரமாகிற ப்ரமாணத்தைக் கொண்டு பார்க்கும்போது பரமபுருஷனுடைய பாதுகையே ப்ரமேயமாய் நின்றதென முடிந்தது. இவ்வளவும் ப்ரமாதாக்கள் இல்லாதபோது வ்யர்த்தம். தகுந்த தர்க்கத்தைக்கொண்டு ப்ரமாணத்தால் ப்ரமேயத்தை நிஷ்கர்ஷித்துத் தமது நிஷ்கர்ஷப்படி உபதேசத்தாலும் ஸ்வாநுஷ்டானத்தாலும் உலகத்திற்கு உஜ்ஜீவநமார்க்கத்தை அறிவித்தல் விசிஷ்டப்ரமாதாக்களின் ப்ரதானக்ருத்யம். இப்படி வேதாந்தார்த்தம் நிஷ்கர்ஷிக்கப்பெற்று லோகோபகார தத்பரராய் இருப்பவர்களே ஸாதுக்களெனப்படுவர். இவர்களால் வேதங்களின் உத்தேசம் நிறைவேறி அவை ஸபலங்களாம். இப்படி யதிராஜஸூக்தியை யாதரித்து அதன்படி வேதாந்தங்களுக்கு ஸ்ரீரங்கநாதன் பாதுகையே பரமப்ரமேயமென்று தேறி நின்ற ப்ரமாதாக்களான ஸத்துக்கள் மற்ற ப்ரமாதாக்களைக் காட்டிலும் ஸர்வவிதத்தாலுமுத்க்ருஷ்டர்.

இவ்வித ப்ரஹ்மவித்துக்களின் பாததூளியை சிரஸ்ஸில் ஏற்றால் உஜ்ஜீவியாமல் ஒருவனும் இவ்வுலகில் இருக்கமாட்டானன்றோ? ஆகையால் ஸத்துக்களுடைய பாதாரவிந்த தூளி உலகங்காக்குமென்னக் குறையில்லை.

ஜயந்தி என்பதற்கு 'ஸர்வோத்கர்ஷேண வர்த்தந்தே' 'எல்லாருக்கும்மேம்பட்டு விளங்குகின்றனர்' என்று பொருள் கூறுவர். அதற்கு முக்யமான வர்த்தம் 'வெல்லுகின்றார்கள்' என்

பதே. யாரை வெல்லுகின்றார்கள் என்றால், அஸங்கோச ந்யாயத்தாலே 'எல்லாரையும்' என்று கிடைக்கும். ஈச்வரன் என்றால் யாருக்கு என்று ஆசங்கை பிறக்கும்போது இன்னாருக்கு என்று விசேஷித்துச் சொல்லாமையால் ஸர்வத்துக்குமென்று வைத்து ஸர்வேச்வரன் என்று பொருள் கொள்வர். இது அஸங்கோச ந்யாயம். இவ்வித ஸ்தலங்களில் வெற்றி குணங்களைப் பற்றின தாகையால் குண விஷயத்தில் மற்றெல்லாரையும் ஸத்துக்கள் ஜயிக்கிறார்கள் என்று ஸந்தோ ஜயந்தி' என்பதற்கு அக்ஷரார்த்தம். அதுவே பங்க்யந்தரத்தால் 'ஸர்வோத்கர்ஷேண வர்த்தந்தே' எனப் படுகின்றது.

இந்த ஸ்தோத்ரகாவ்யரத்நத்தை மங்களாதியாகவும் மங்களாந்தமாகவும் செய்யத் திருவுள்ளம் பற்றின ஸ்ரீதேசிகன் 'பரதாய பரம் நமோஸ்து' 'த்வந்நாமாநம் முநிமிஹ பஜே' என்ற மாதிரி ஸத்துக்களை நமஸ்கரிக்கின்றேன் பஜிக்கிறேன் என்றாவது 'வாசம் திவ்யாம் திசது' என்றமாதிரி அவர்கள் என்னைக்கடாக்ஷிக்கவேணும் என்றிப்படியாவது ஸாதித்திருக்கலாம். அதையெல்லாம்விட்டு ஸத்துக்கள் ஜயிக்கிறார்கள் என்று ஸாதித்தது த்வநியாக ஒரு அர்த்தத்தை வ்யஞ்ஜிப்பிக்கைக்காக அதாவது;– 'ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாத திவ்ய பாதுகா பரிசரணபரர்களான ஈத்ருச ஸத்துக்களுக்கும் அடியேனுக்கும் ஒரு விவாதம் உண்டாயிற்று. அதில் எவ்வளவோ முயன்றும் அடியேனுக்கு வெற்றி கிடைக்கவில்லை. அவர்களே வெற்றி பெற்றார்கள். அடியேன் தோற்றேன்' என்று தன் விஷயமான அவர்களது வெற்றி த்வநிப்பொருளாக இங்கே கருதப்பட்டது. என்ன விவாதம்? எப்படி அவர்கள் வெற்றிபெற்றார்கள்? எனில் இதற்கு ஸ்ரீதேசிகன் தந்தருளுமுத்தரம் இது—

1. 'விச்வக வ்யாபிந்யகாதே' என்றபடி பகவத்ராமானுஜ ஸித்தாந்தத்திற்கு ப்ரதிபக்ஷிகளால் ஒரு ஹாநியுமேற்படாதபடி பாதுகாத்தலின் பொருட்டு ஒருவரை நியமிக்க வேண்டிய ஸமயத்தில் அடியேனை அந்தக் கைங்கர்யத்திற்காக அபிஷேகம் பண்ணிவைத்துப் பெரியவர்கள் அதற்கநுகுணமாக கவிதார்க்கிக ஸிம்ஹம் என்ற பெயரும் சூட்டினார்கள். இதில் நம் ஸயூத்யர்களிலேயே சிலருக்கு இவர் தார்க்கிக ஸிம்ஹமாய் இருக்கலாம், கவிஸிம்ஹமாய் இருக்கமுடியாது என்ற எண்ணமும் தத்ப்ரயுக்த விகத்தன பரிவாதாதிகளும் உண்டாயின.

2. பிருதப்ரதானத்தினால் ஸந்தோஷமோ, சிலர் அதை ஸஹிக்காமையால் விஷாதமோ அடியேனுக்கு ஈஷத்தும் இல்லை. ஆகிலும் இவர்கள் ஸ்ரீரங்கநாதனுடைய திவ்யாஸ்தானத்தில் கூடியிருந்த மஹான்கள் கவந கௌசல பரீக்ஷைக்காக ஸ்ரீரங்கநாதன் திருவடிவிஷயமாக ஒரு ஸ்தோத்ரம் செய்யவேணுமென்று அடியேனை நியமிக்கும்படி ஒரு ஸம்விதானம் செய்துவைத்தார்கள். ஸத்துக்களுடைய ஆஜ்ஞையைத் தலையால்வஹிக்கும் சீலமுடையேனாகிலும் இது அஸ்மத்ஸம்ப்ரதாய நிஷ்டர்களோடு ஸ்பர்த்தையில் சேருவதால் அடியேன் கொஞ்சமேனும் ஸம்மதித்தேனில்லை. ஆனால் அவர்கள் அடியேனை என்னிச்சைப்படி விட்டார்களில்லை. மிகவும் நிர்பந்தமாக செய்தே தீரவேணுமென்று நியமித்தார்கள். ப்ரஹ்மவித்துக்களுடைய புவநத்ராண பதபங்கஜ ரேணுக்களாயிருப்பவர்களுடைய நியமநத்தை உல்லங்கநம் பண்ணுவது தகுமா என்று பயந்தேன். ஒருபக்கம் பாகவத ஸ்பர்த்தை; மற்றொருபக்கம் பாகவத நியமநாதிலங்கநம். இந்தஸங்கடத்தில் அடியேனுக்குண்டான க்லேசம் ஸர்வேச்வரனுக்குத்தான் தெரியும். ஏதோ ஒருவிதமாக யோசித்து ஸ்ரீரங்கநாதன் திருவடி விஷயமாக அடியேன் ஒன்றும்செய்ய ப்ரவ்ருத்திக்கவில்லேன். அவச்யம் ஸ்துதி பண்ணவேண்டுமென்று நியமித்தால் பாதுகாவிஷயமாக விண்ணப்பிக்கிறேன் என்று அரைமனத்துடன் ஸம்மதித்தேன். பிறகு ஸ்வாமிகள் பாதுகை விஷயமாகவே ஸ்தோத்ரம் இருக்கட்டுமென்று அப்யநுஜ்ஞை பண்ணி, மேலும் அர்த்தாங்கீகாரம் போதாது, ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் குறிப்பிட்ட காலத்திற்குள் ஸ்ரீரங்கநாத பாதுகாஸ்தோத்ரம் அவச்யம் பண்ணக்கடவேன்' என்று ப்ரதிஜ்ஞை பண்ணும் என்றார்கள். அகத்யா பண்ணினேன்.

3 மஹான்கள் அப்படி நியமிக்கும்போது ஸ்ரீசடாரியை அடியேன் சிரஸ்ஸில் எழுந்தருளப்பண்ணி நியமித்தார்கள்.

4 பிறகு எத்தனை ச்லோகம் பண்ணுகிறதென்ற ப்ரச்நம் வந்தபோது ப்ரதிகவியான ஸ்வாமி அடியேனுக்கே அந்த நிர்த்தாரணத்தை விட்டுவிட்டார். அடியேன் ஆயிரமாயிருக்கலாமோ வென்றேன். இது அங்கீகரிக்கப்பட்டது.

5 'அடியேனுக்கு ஸர்வாத்மநா இஷ்டமில்லாமலிருக்க நீதான் உன் ஸ்தோத்ரத்தைப் பண்ண இப்படி நியமிக்கிறாய். ஆகையால் பாகவதாபசாரம் ஒன்றுமில்லாமலிருக்கும்படி நீயே க்ருபை பண்ணவேணும்' என்று பாதுகையினிடத்தில் சரணாகதி பண்ணி ஸ்தோத்ரத்தை ஆரம்பித்துப் பூர்த்தி செய்தேன்.

6 'இந்த ஸ்தோத்ரத்தைக் கடாக்ஷித்து இதற்கு பரம மூலகாரணமான ஸ்வாமி திருவுள்ளத்தில் என்ன எண்ணம் உண்டாகுமோ என்று மிகவும் பயந்து அவரும் அடியேனிடத்தில் க்ருபையே செய்தருளும்படி நீ அநுக்ரஹிக்கவேணும்' என்றும் பாதுகையை ப்ரார்த்தித்தேன்.

7. அந்த ஸ்வாமியும் அபிஜ்ஞதமராகையாலே கடைசியில் இதையெல்லாம் வெறும் விளையாட்டாகவே கருதுவரென்றும், இந்த ஸ்தோத்ரத்தைக் கடாக்ஷித்து அடியேனைக் குளிரக் கடாக்ஷிப்பரென்றும் தேறினேன்.

8. நியமித்த பெரியோர்களுடைய திருவடியே அபசாரமொன்றும் புகாது அடியேனைக் காப்பாற்றுமென்று விச்வாஸங் கொண்டேன்.

இப்படி 'ஸ்தோத்ரம் செய்யவேணும்' என்றும், 'அப்படி நியமிக்கக்கூடாது' என்றும் எங்களுக்கிடையே ஏற்பட்ட விவாதத்தில் அவர்கள் வெற்றிபெற்றார்கள், அடியேன் தோல்வியடைந்தேன் என்று இதையெல்லாம் ஸ்ரீதேசிகன் ஸ்வயமே பாதுகாஸஹஸ்ரத்தில் வ்யக்தமாய் ஜ்ஞாபித்திருக்கிறார். ஸமாஹி—

1 ப்ரவ்ருத்த விவாதகேஷு பந்தாஸு ஜயிஷ்வ

ஸநவயிஹிதம் ஷ்வஸ்வ த்வாதாஸ்ஹஸ்ரஸே |

ஷணிநிகரஸஹ்ஸ்ஸ்ர ஹெஸ்ரதுஸ்ஸ நாதைஸ்ஹணீ [நாம

உபாயதி தாம்ஸதா நதாதஸுக [பாதுகா || 464

ஓ பாதுகையே! எனது புத்தி மிகச் சிறியது. உன் மஹிமைக்கோ எல்லையில்லை. ஆயினும் அதை நான் உன் அருளினால் துதிக்கிறேன். இதைப்பார்த்து கவிகளான பலர் செருக்கோடு என்னென்னவோ பேசுகிறார்கள். அதையெல்லாம் உன் மணிகளிலிருந்து உண்டான இனிய நாதங்களால் நீ அடக்குகிறாய் போலும்.

2 ப்ரவ்யாதாநாம் ப்ரஷிஷி ஸதாம் சாரயிஷ்வா ப்ரதிஜ்ஞாம்

ப்ராயேண ஷ்வாம் ப்ரதிவிஹவா ஷண்டயஷ்யா ஷ்வ |

பாதந்யாஸக்ரமஷ்ரமணம் ப்ராப்ய [ஸஹஸ்ராஜாக

பத்யாரஹிதா ஷணபவி ஷ்ணம் பாதகே

ஷ்வைஷி நாதைஷ: || 401

மஹா ப்ரஹ்மவித்துக்கள் உலகமெல்லாம் புகழ்பெற்றவர்கள்; அவர்கள் கோஷ்டியில் 'பாதுகாஸஹஸ்ரஸ்தோத்ரம் செய்யக்கடவேன்' என்னும் ப்ரதிஜ்ஞையைப் பண்ணும்படி என்னைச் செய்து என்னைக்கொண்டு நீயே உன் பெருமையை வர்ணித்துக்கொண்டிருக்கிறாய். அதனால் இதை முடித்துவைப்பது உன் பொறுப்பு; பெருமாள் ஒரு திருவடியை எடுத்துவைக்கும்போது ஒருதரம் ஶப்திக்கிறது; இன்னொரு திருவடியை எடுத்து வைக்கும்போது இன்னொருதரம் ஶப்திக்கிறது; மேலும்மேலும் அடிவைப்புகளில் இப்படியே ஶப்திக்கிறது. என்றிப்படி ஏற்படும் ஶப்தங்களால் முதல் ச்லோகம் ஆரம்பமாயிற்று; இரண்டாம் ச்லோகம் ஆரம்பமாயிற்று; மூன்றாம் ச்லோகம் ஆரம்பமாயிற்று; நான்காம் ச்லோகம் என்றிப்படி ச்லோகங்களை எண்ணிக்கொண்டு உன் பொறுப்பை நிறைவேற்றுகிறாய்போலும்.

பெரியவர்கள் நியமித்து எத்தனையோ

க்ரந்தங்கள் எழுதியிருக்கின்றேன். அவர்கள் நியமனத்தை சிரஸா வஹிக்கவேண்டியது எனது கடமை என்று நான் உணராமலில்லை. ஆனால் ப்ரக்ருதத்தில் அது முடியவில்லை. அப்படியிருந்தும் ஸ்ரீரங்கநாதன் ஆஸ்தானத்தில் அவனது அடியார்கள் குழுமி அடியேன் சிரஸ்ஸில் பாதுகை எழுந்தருளியிருக்க நிர்ப்பந்தமாக 'செய்யும் ப்ரதிஜ்ஞையை' என்றால் அடியேனுக்கு வேறு மார்க்கம் என்னவிருக்கின்றது? உல்லங்கநம் பண்ணினால் ப்ரஹ்மவிதபசாரத்தால் ஆமுஷ்மிக ப்ரத்யவாயமும், இவர்கள் ப்ரக்யாதர்களாகையாலே உலகம் முழுவதும் 'இத்தனை பெரியவர்கள் நியமித்தும் இவர் ஸ்வதந்த்ரராய்ப் போந்தார்; இவர் என்ன படித்தவர்?' என்று நிந்தையில் ஐஹிகப்ரத்யவாயமும் வருமன்றோ? என்று இங்கு வ்யங்க்யம். (இப்படிப் பெரியவர்கள் ப்ரதிஜ்ஞை பண்ணச் சொன்னதாகவும் இவர் அதைச் செய்ய நேர்ந்ததாகவும் சொல்வதிலிருந்து இதற்கு முன் நடந்திருக்கவேண்டிய ஸம்வாதமும் வ்யங்க்யம்.)

இப்படி ஸத்துக்கள் நியமித்தார்கள் என்பது.

'ஸம்பூஜித꞉ ஸம்ஸதி ஸத்பிரேவம்
பாதாவநீம் ரங்கபதேர்நிபத்தும் ।
பத்யை꞉ ஸஹஸ்ரேண மயா ப்ரபத்யே
தாம் பாவயேயம் கவிஸார்வபௌம꞉ ॥'

என்று வைபவப்ரகாசிகையிலும்,

'ரங்காதிநாதஸ்ய கவிர்விசிஷ்டைர்ப்ரணாம
ப்ராப்ய ஜநைர꞉ ।
பாதாவந்யா꞉ ஸ்துதிக்ருதயே ப்ரேரித꞉
ஸஹஸ்ரேண பத்யை꞉ ॥'

என்று பாதுகாஸஹஸ்ர வ்யாக்யாநாரம்பத்திலும் சொல்லப்பட்டது.

'ஸ்தோத்ரம் பாதுகா விஷயமாக இருக்கும்படி நியமிக்கவேணும்; திருவடி விஷயமன்று' என்று ஸ்ரீதேசிகன் ப்ரார்த்திக்க, 'அப்படியே' என்று அப்யநுஜ்ஞைபண்ணினர்கள் என்பது.

'ஸ்ரீமந் வேங்கடநாதோ ஸ்வாமி ... ரங்கநாதஸ்ய ஸ்தவ்யா பாதுகாஸ்தவமங்கலம்
ப்ரார்த்ய தாநப்யநுஜ்ஞாத பாதுகாஸ்துதி꞉'

என்று வ்யாக்யாநத்தில் சொல்லப்பட்டது. இப்படி ஸ்தோத்ரவிஷயமாய் ப்ரேரணம். அது பாதுகாவிஷயமாய் இருப்பதற்கு அப்யநுஜ்ஞை என்பதை நிரூபித்துக்கொள்ளவேணும்.

பெருமாள்திருவடியை உபேக்ஷித்து பாதுகையை ஸ்துதித்தால் திருவடி விஷயத்தில் அபசாரப்பட்டதாக ஆகாதோ என்று சங்கைவர அதற்குப் பரிஹாரம் ஸ்ரீதேசிகன் ஸாதிக்கிறார்:—

த்வயி விஹிதா ஸ்துதிரேஷா
பதரக்ஷிணி பவதி ரங்கநாதபதே ।
தத்வபி க்ருதா ஸமயார்சா
நமதாமிவ நாகிநாம் சிரஸி ॥ 20

ஓ பாதுகையே! உன்விஷயமாகச் செய்யப்பட்ட இந்தஸ்துதி ஸ்ரீ ரங்கநாதன் திருவடி விஷயமாக ஆகின்றது. எப்படியெனில் அந்தத் திருவடிமேல் செய்த அர்ச்சனை அதை வணங்கி உபாஸிக்கும் தேவர்கள் சிரஸ்ஸில் காணப்படுவதுபோல. தன்னிடத்தில் பூஜை செய்தால் அது மற்றொருவனுக்குச் செய்ததாகும் என்று திருவடி ஒரு அநுஷ்டாநத்தைக் காட்டியிருக்கிறது. அதையே நான் இப்போது பின்பற்றினால் அதற்குக் கோபம் வருவானேன், நான் அபசாரப்படுவதாகக் கருதுவானேன்? என்று கருத்து.

3 நீசேऽபி ஹந்த மம மூர்த்நி நிவிச்ய
மேஷம் துங்கேऽபி யந்நிவிசதே நிக
மோத்தமாங்கே । ப்ராசேதஸப்ரப்ருதிபி꞉
ப்ரதமோபகீதம் ஸ்தோஷ்யாமி ரங்கபதி
பாதுகயோர்யுகம் தத் ॥ 5

'என்ன ஆச்சர்யம்! தாழ்ந்த இந்த என் தலையிலும் உயர்ந்த வேத சிரஸ்ஸிலும் ஒருவிசேஷமுமில்லாமல் வந்து பதிகின்றதே. வால்மீகிபோன்றவர்களால் முதலில் துதிக்கப்பெற்ற ஸ்ரீ ரங்கநாதனுடைய அந்த திவ்ய பாதுகையிணையை நான் ஸ்துதிக்கப் புகுகிறேன்' பரிஷத்தில் தமது சிரஸ்ஸில் பாதுகை வீற்றிருக்கத் தாம் செய்த ப்ரதிஜ்ஞையை இங்கே நிபந்திக்கிறார். 'நிவிசதே' என்று நிகழ்காலம். அது சிரஸ்ஸில் வீற்றிருந்ததும் இந்தஸ்துதி செய்யப்பட்டதும் ஓரே காலம்

என்று வ்யஞ்ஜிப்பிக்கைக்காக.

ஸ்வப்நேऽபி சேத் கலயஸி மயி ஸந்நிவி
ஷ்டா நத்ரஸ்ய தே நாகபதே நவாதராக்ஷே ।
யுக்தம் ததேவ (தவ) ததிஹ தேவி யதஸ்ஸ்வ
யம் ஸந்தோ விதுஸ் ஸ்வபதி தாத்ருசபாவ
ஸித்தம் ॥ 987

ஓ ரங்கநாதன் பாதுகையே! ஸ்வப்நத்திலே யும் நான் வணங்கி நிற்க என்னுடைய சிரஸ்ஸில் நீ வந்து வீற்றிருப்பது, மிகவும் யுக்தமே. ஏனெனில் பெருமாள் 'ஸ்வப்நதீக்ஷ்ய' (ஸ்வப்ந புத்தியால் அறியத்தக்கவன்) எனப்பட்டார். அந்த வைபவமெல்லாம் உனக்கு முண்டு. ஆகையால் நீயும் ஸ்வப்நபுத்திக்குப் புலனாக வேண்டாவோ! 'ஸ்வப்நேபி' என்ற அபிப்ராயத்தால் (உம்மையால்) பரிஷத்தில் சிரஸ்ஸில் வீற்றிருந்தது குறிக்கப்படுகின்றது. ஸ்ரீரங்கநாதனுடைய ஆஸ்தாநத்தில் ப்ரதிஜ்ஞை நடந்த பிறகு ஸ்ரீதேசிகன் திருமாளிகைக்கெழுந்தருளி ஸாயமபிகமநாதிகளுக்குப் பின் சயனித்துத் திருக்கண் வளர்ந்தருளும்போது ஸ்வப்நத்தில் ஸ்ரீரங்கநாதன் திவ்யபாதுகை முன்போல் தமது சிரஸ்ஸில் எழுந்தருளிப்ரதிஜ்ஞையை ஜ்ஞாபகப்படுத்த, ப்ரபுத்தராய் ஸ்தோத்ரத்தைச் செய்துமுடித்தாரென்று புராவித்துக்களான பெரியோர் பணிப்பர்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஓர் வைராக்ய நிதி

[ஸ்ரீவைஷ்ணவ தாஸன்]

ஸுமார் 25 வருஷங்களுக்கு முன்பு நடந்த ஸம்பவம் அது. அப்போது ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி தமக்கு மாம்பாக்கத்தில் ஸொந்தமாக வுள்ள திருமாளிகையைத் தாற்காலிகமாக விட்டுவிட்டு மதுராந்தகத்திலேயே எழுந்தருளியிருந்துகொண்டு ஸ்ரீமத்பாகவதத்தை ப்ரவசனம் செய்துகொண்டிருந்தார்.

மதுராந்தகத்துக்கு எப்போதுமே ஒரு தனிப் பெருமையுண்டு. எல்லா திவ்ய தேசங்களிலும் ஸ்ரீபாஷ்யகாரர் துரீயாச்ரமத்தில் ஸேவை ஸாதிக்கிறார் என்றால் மதுராந்தகத்தில் அவர் க்ருஹஸ்தராக ஸேவை ஸாதிக்கிறார். அதுவும் தனிமையில் அல்ல; தமது ஆசார்யனாகிய பெரிய நம்பிகளோடுதான். பெரிய நம்பிகள் ஜ்ஞாநமுத்ரையோடு ஆசார்ய ஸ்தானத்தில் வீற்றிருக்க அவருக்கருகில் சிஷ்யருடைய ஸ்தானத்தில் ஸ்ரீ பகவத்ராமாநுஜன் எழுந்தருளியிருக்கிறார். இந்த அர்ச்சாமூர்த்தின் ஸ்ரீபாஷ்யகாரர் பெரிய நம்பிகளிடம் பஞ்சஸம்ஸ்காரமும் மந்த்ரோபதேசமும் இந்தத் திருப்பதியில் பெற்ற ஐதிஹ்யத்தை ஸேவிப்பவர்களுக்கு எப்போதும் ஞாபக மூட்டிக்கொண்டே இருக்கிறார்கள். ஸ்ரீபாஷ்டகாரர் பஞ்சஸம்ஸ்காரம் பெற்ற இடம் மதுராந்தகம் ஏரிக்கரையில். அந்த ஏரியிலும் ஸ்ரீபாஷ்யகாரர் பஞ்சஸம்ஸ்காரம் பெற்ற இடம் என்று ஒரு மடு ப்ரஸித்தமாக விளங்கிவருகிறது. பரமைகாந்திகளெல்லாம் தினமும் அங்குதான் சென்று நீராட்டங்கண்டருளி மேற்கொண்டு அநுஷ்டாநங்களைச் செய்ய ஸ்ரீஸந்நிதியின் புஷ்கரிணிக்குச் செல்வார்கள்.

இத்தகைய சிறப்புடைய மதுராந்தகம் பரமைகாந்திகளான பல பெரியோர்களை ஆகர்ஷித்ததில் வியப்பில்லை.

நாம் மேலே கூறியபடி ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி தம்முடைய மாம்பாக்கத்துத் திருமாளிகையையும் விட்டுவிட்டு ஸ்ரீமதுராந்தகத்தில் புராணப்ரவசனம் செய்துகொண்டிருந்தார். புராணப் ப்ரவசனம்தான் ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமியின் திருவுள்ளத்துக்கு மிகவும் உகப்பான கைங்கர்யம். விஷயங்கள் சொல்லும்போது அவற்றை அவர் அநுபவபூர்

வமாகச் சொல்லுவார். அவரே பரவசமாகிக் கூறும் விஷயங்கள் கேட்பவர்களுக்கு இன்னும் ஆநந்தமாக இருக்கும். அவருடைய புராண ப்ரவசனத்தைக் கேட்கக் கூடுகிறவர்களெல்லாம் ஆச்சர்யமாக அவர் கூறும் விஷயங்களை யெல்லாம் கேட்டு, பரவசமாகி, மெய்மறந்து, ஸ்ரீசுகமுனிவர் ஸ்ரீபாகவதத்தைக் கூறும்போது அதைக் கேட்டனுபவித்த பரீக்ஷித்து மஹாராஜனுடைய தன்மையை அடைந்து சித்ரப் பதுமையைப்போல் இருப்பார்கள்.

அவருடைய புராண ப்ரவசனத்தைக் கேட்பதற்குக் கூடுகிற கூட்டம் ஏராளமாக இருக்கும். அவ்வளவு பெரிய கூட்டம் கூடுகிறபோதும் உபந்யாஸம் பண்ணுகிற ஸ்வாமிக்கு எதிரில் முன்புறத்தில் இரண்டு இடங்கள் எப்போதும் இரண்டு மஹான்களுக்காக ஒதுக்கப் பட்டிருக்கும். அந்த மஹான்கள் வருவதற்குச் சற்று தாமதமானாலும் அந்த இடங்களில் வேறு ஒருவரும் உட்கார மாட்டார்கள். அவர்கள் வரும்போது ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி தமது புராணத்தைச் சற்று நேரம் நிறுத்தி அவர்களை முன்னால் எழுந்தருளும் படி வேண்டி அவர்கள் அவ்வாறே வந்து எழுந்தருளிய பிறகுதான் மறுபடியும் ஆரம்பிப்பார்.

இவ்வாறு ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமியின் பஹுமானத்துக்குப்பாத்ரர்களாக விளங்கிய இரண்டு மஹான்களும் ஸ்வர்ணம் ஸ்வாமி என்று போற்றப்பட்ட ஸ்ரீமுஷ்ணம் ஸ்வர்ணம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியும் கருடபுரம் ஸ்வாமி என்று போற்றப்பட்ட கருடபுரம் ராஜகோபாலாசார்ய ஸ்வாமியுந்தான்.

இவர்களில் ஸ்வர்ணம் ஸ்வாமியைப்பற்றி எல்லாருக்கும் நன்றாகத் தெரியும். நம் ஸ்ரீ அழகியசிங்கர் பூர்வாச்ரமத்தில் இந்த மஹானிடந்தான் ஆச்ரயித்து ஸ்ரீ பாஷ்யம் முதலிய தர்சன க்ரந்தங்களை யெல்லாம் காலக்ஷேபம் பண்ணி அதிகரித்தருளியது. நாம் இப்போது சொல்லுகிற காலத்துக்கு முன்னாலேயே ஸ்ரீ அழகியசிங்கர் காலக்ஷேப மெல்லாம் பூர்த்தியாகி சாற்றுமுறையாகி தமது ஸ்ரீக்ராமத்துக்கு எழுந்தருளியாகிவிட்டது. அவர் அப்போது மதுராந்தகத்தில் இல்லை. வேறு சில ஸ்வாமிகள்தான் ஸ்ரீஸ்வர்ணம் ஸ்வாமியிடம் அப்போது காலக்ஷேபம் செய்து கொண்டிருந்தார்கள்.

அப்போது கருடபுரம் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி க்ருஹஸ்தாச்ரமத்தில்தான் எழுந்தருளியிருந்தார். அவருடைய அந்வயமெல்லாம் ஸ்ரீமத்திருவஹீந்த்ரபுரம் ஸ்வாமி என்றும் ஸ்ரீசின்னஸ்வாமி யென்றும் வழங்கப்பட்ட ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகன் ஸந்நிதியில்தான். ஸ்ரீராஜகோபாலாசார்ய ஸ்வாமி கபிஸ்தலம் தேசிகாசார்யர் என்னும் மஹானிடம் ஸாமாந்ய சாஸ்த்ரங்களை யெல்லாம் அதிகரித்த பின்னர் திருவஹீந்த்ரபுரத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீசின்னஸ்வாமியை ஆச்ரயித்து அங்கு ஸ்ரீசேட்லூர் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியைப் போன்ற மஹான்களுடன் ப்ரஹ்மவித்யையை அதிகரித்து ஆத்ம ஸமர்ப்பணத்தையும் செய்த பின்பு தம் ஆசார்யனைத் தமக்கு ஸந்யாஸம் ப்ரஸாதிக்கும்படி ப்ரார்த்தித்தார். அவருடைய மனோநிலை அப்போதே ஸந்யாஸம் ஏற்கக்கூடிய பக்வநிலையில்தானிருந்தது. ஆயினும் அவருடைய ஆசார்யன் அதை அங்கீகரிக்கவில்லை. அவர் 'இப்போது ஸந்யாஸம் வேண்டாம்; இன்னும் கொஞ்சகாலம் கழித்து ஆகட்டும்.' என்று ஸாதித்துவிட்டார். இதற்குப் பின்பு ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, ஆசார்ய நியமநம் பெற்று ஸ்ரீமதுராந்தகத்துக்கு எழுந்தருளினார். அங்கு அவரிடம் ஸ்ரீமதுராந்தகம் வீரராகவாசார்யர் ஸ்வாமி முதலிய ப்ரஸித்த வித்வான்களெல்லாம் காலக்ஷேபம் பண்ணி சாற்றுமுறை பண்ணினார்கள். நாம் இப்போது சொல்லுகிற காலத்தில் மதுராந்தகம் வீரராகவாசார்யஸ்வாமி காலக்ஷேபம் பூர்த்தியாகி வெளியூருக்குப் போய்விட, வேறு சில வித்வான்கள் காலக்ஷேபம் செய்து கொண்டிருந்தார்கள். ராஜகோபாலாசார்யருக்கு மனது வைராக்யத்தில் பரிபக்வமடைந்து நாளுக்கு நாள் ஸந்யாஸத்துக்காகத் துடித்துக் கொண்டிருந்தது.

நிலைமை இவ்வாறு இருக்குங்காலத்தில்தான் ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமி ஸ்ரீமத்பாகவதம் ப்ரவசனம்

செய்துகொண்டிருந்தார்.

ஸ்ரீகருடபுரம் ராஜகோபாலாசார்ய ஸ்வாமியின் மனோநிலை ஸ்ரீதிருக்கோட்டியூர் ஸ்வாமிக்கு நன்றாகத் தெரியும். ஸ்ரீகருடபுரம் ஸ்வாமியின் குடும்பத்தாருக்கும் நன்றாகத் தெரியும். ஒருவர் எவ்வளவுதான் விரக்தராக இருந்தாலும் அவர் ஸந்யாஸியாகப் போகட்டும் என்று எந்தக் குடும்பத்தார்கள்தான் விட்டுவிடுவார்கள்?

ஒருநாள் கருடபுரம் ஸ்வாமியின் புத்ரர்களும் மற்றவர்களும் கண்ணீரும் கம்பலையுமாக அவருக்கெதிரில் நின்று தங்களை நிர்கதியாக விட்டுவிட்டு ஆச்ரமஸ்வீகாரம் செய்துகொள்ள வேண்டாமென்று ப்ரார்த்தித்தார்கள். ஆனால் அவரோ 'நானா உங்களைத் தாங்குகிறேன்! ஸர்வேச்வரன் இருக்கிறான்' என்று பதில் கூறிவிட்டார்.

இத்தகைய ஸம்பாஷணைகளால் அவருடைய மனம் மிகவும் வேகமாக ஸந்யாஸத்தில் ப்ரவ்ருத்திக்கிறது என்றறிந்த அவருடைய புத்ரர்கள் திருக்கோட்டியூர் ஸ்வாமியைத் தஞ்சமாக அடைந்தார்கள். அவர்கள் திருக்கோட்டியூர் ஸ்வாமியைப் பலவாறு தண்டன் ஸமர்ப்பித்து 'ஸ்வாமி! தேவரீர்தான் அடியோங்களை ரக்ஷிக்கவேண்டும். அடியோங்களுடைய தகப்பனாருடைய மனநிலை மிகவும் வேகமாக ஸந்யாஸத்தை நோக்கிச் செல்லுகிறது. அடியோங்கள் வார்த்தைகள் அவருடைய செவிகளில் ப்ரவேசிக்கவில்லை. தேவரீர்களிடம் அவருக்கு மிகவும் அலாதியான பஹுமானம் உண்டு. தேவரீர்களுடைய வார்த்தையை அவர் தட்டமாட்டார். ஆகையால் அடியோங்களுக்காக தேவரீர் அவரிடம் சொல்லி அவருடைய மனத்தை மாற்றவேண்டும்' என்று ப்ரார்த்தித்தார்கள்.

அதைக் கேட்ட திருக்கோட்டியூர் ஸ்வாமி சிரித்துக்கொண்டு 'இதற்கு நான் என்ன பண்ண முடியும்? வைராக்யத்தின் அதிசயத்தால் ஸந்யாஸம் பெறவேண்டும் என்னும் த்வரை அவருக்கு உண்டாகிவிட்டால் அவர் நான் சொல்லியா நிற்கப் போகிறார்? இருந்தாலும் நான் என்னால் முடிந்ததைச் செய்கிறேன்' என்று ஸாதித்தாயிற்றாம்.

திருக்கோட்டியூர் ஸ்வாமி தாம் நேரில் ராஜகோபாலாசார்ய ஸ்வாமியிடம் ஒன்றும் சொல்லவில்லை. ஆயினும் அவர் தம்மால் முடிந்ததைச் செய்யத்தான் செய்தார்.

பக்குவமாக விஷயங்களைச் சொல்லுவதில் ஸ்ரீதிருக்கோட்டியூர் ஸ்வாமிக்கு நிகராகச் சொல்லக் கூடியவர்கள் வேறு ஒருவருமே கிடையாது. அதுவும் புராணப்ரவசனத்தின் போது சாடுவாகவும் உதாஹரணங்களுடனும், ஹாஸ்யமாகவும், பக்வமாகவும் விஷயங்களை எடுத்துச் சொல்லி கேட்பவரை மெய்மறச்செய்வதும் விஷயங்களை மனத்தில் நன்றாகப் பதியச் செய்வதும் அவருக்கே அஸாதாரணமாக அமைந்த பெருமை.

ஸ்ரீபாகவதம் வைராக்யத்தின் சிறப்பையும் ஸந்யாஸத்தின் சிறப்பையும் சொல்லுகிற புராணமல்லவா!

அன்றைய உபந்யாஸத்தில் அத்தகைய ப்ரகரணம் ஒன்று வந்தது. அதைக் காரணமாக வைத்துக்கொண்டு ஸ்ரீஸ்வாமி தமது ப்ரவசன ஸாமர்த்யத்தை யெல்லாம் காட்டி உபந்யஸித்தார்.

அன்று அவர் ஸந்யாஸ ஆச்ரமம் மிகவும் உயர்ந்தது என்றும், ஆனால் அந்த ஆச்ரமத்தின் தர்மங்களை அநுஷ்டிப்பது மிகவும் ச்ரமஸாத்யமென்றும், அது எப்போதும் பிறருடைய தயவையே எதிர்பார்த்து நிற்கவேண்டிய ஆச்ரமம் என்றும், அதை நிர்வஹிப்பது மிகவும் கஷ்டமானது என்றும், ஸந்யாஸியாகிய பின்பு ஆச்ரமத்தை யதோக்தமாக நிர்வஹிக்க முடியாவிட்டால் பாபம் ஸம்பவிக்கும் என்றும், ஸந்யாஸியாகப் போகிறேன் என்று கிளம்பியபின்பு திரும்பவே கூடாது என்றும் ஆகையால் முன்னமேயே தீர்க்கமாக ஆலோசனை செய்த பிறகே ஸந்யாஸம் பெற வேண்டுமென்றும், எல்லாவற்றையும் நன்றாகப் பர்யாலோசனை பண்ணிப் பார்த்தால் வைராக்யநிதியாகிய ஸ்ரீதேசிகன் எழுந்தருளியிருந்த ஆச்ரமத்துக்கு மிஞ்சியது வேறொன்றும் கிடையாதென்றும் என்று இவ்வாறாக ஸந்யாஸ ஆச்ரமத்தின் கஷ்டங்களை யெல்லாம் தம்முடைய ப்ரவசன சக்திகள் அவ்வளவையும் உபயோகித்து உபந்யஸித்தருளினார்.

அவர் உபந்யஸித்த விஷயங்களெல்லாம் அவருடைய தீர்மானமான அபிப்ராயங்களே! அவர் சொல்லும்போது பரவசமாக அவற்றைச் சொன்னார். கதை கேட்க வந்தவர்களெல்லாம் அதைக் கேட்டு மெய்மறந்து நின்றார்கள். எனினும் அந்த விஷயங்களெல்லாம் ஸ்ரீராஜகோபாலாசார்ய ஸ்வாமியிடம் ஒரு மாறுதலையும் உண்டுபண்ணவில்லை.

ஸந்யாஸ ஆச்ரமத்தின் ச்ரமங்கள் அவருக்குத் தெரியாதவைகளல்ல. ஸ்ரீ சின்ன ஸ்வாமியின் ஆச்ரமத்தில் பலவர்ஷங்கள் இருந்து அவரால் ஜ்ஞாந புத்ரராக ஸ்வீகரிக்கப்பட்ட அவருக்கு இது தெரியாதா?

அன்றைய ப்ரவசனம் முடிந்ததும் கருடபுரம்ராஜகோபாலாசார்யஸ்வாமி திருக்கோட்டியூர் ஸ்வாமியை நோக்கி 'ஸ்வாமி! அடியேன் ஒருவனுக்காக இந்தவிஷயத்தை இவ்வளவு விஸ்தாரமாக உபந்யஸிக்க வேண்டுமா?' என்று கூறிச் சிரித்தாராம்.

அதைக்கேட்ட திருக்கோட்டியூர் ஸ்வாமியும் 'புராணம் சொல்லுகிறவர் நிஷ்பக்ஷபாதமாக எல்லாவற்றையும் சொல்லவேண்டியது கடமைதானே. அடியேன் சொல்லிய விஷயத்தில் தவறு ஒன்றுமில்லையே?' என்றுகூறிச் சிரித்தாராம்.

இதற்குப்பிறகு சில நாட்கள் கழிந்தன. வழக்கம்போல் ஸ்ரீஸ்வர்ணம் ஸ்வாமி, திருக்கோட்டியூர் ஸ்வாமி, கருடபுரம் ஸ்வாமி ஆகிய மூவரும் ஏரியில் நீராடிவிட்டு, புஷ்கரணியில் அநுஷ்டானங்கண்டருளிவிட்டுச் சேர்ந்தாப்போலவே ஸல்லாபித்துக்கொண்டு திரும்பினார்கள்.

திருக்கோட்டியூர் ஸ்வாமியை விட்டுப் பிரியாத அவருடைய அநுஜர் ஸ்ரீராம தேசிகாசார்ய ஸ்வாமியைப் போலவே கருடபுரம் ஸ்வாமியை விட்டுப் பிரியாமல் அவருடைய தமயனார் குமாரர் ஸ்ரீநிவாஸாசார்யர் என்பவர் இருப்பார். ஸ்வாமி அநுஷ்டானத்துக்காக ஏரிக்குப்போகும்போது தாம் அவருடைய திருப்பூக்குடலையைக் கொண்டுபோய் ஏரிக்கரையில் ஒரு சுத்தமான இடத்தில் மாட்டிவைப்பது வழக்கம்.

ஒருநாள் வழக்கம்போல் அநுஷ்டாநத்துக்கு கருடபுரம் ராஜகோபாலாசார்யர் ஸ்வாமி எழுந்தருளியாயிற்று. கருடபுரம் சின்னஸ்வாமி (ஸ்ரீநிவாஸாசார்யர்) வழக்கம்போல் திருப்பூக்குடலையைக் கொண்டுபோய் மாட்டினார்.

அன்று அநுஷ்டாநம் செய்து திரும்பிவந்த ஸ்வர்ணம் ஸ்வாமியோடும் திருக்கோட்டியூர் ஸ்வாமியோடும் கருடபுரம் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி திரும்பி வரவில்லை.

உதயத்திற்குள் அநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு திரும்பிவருகிறஸ்வாமிக்கு அன்று ஏன் தாமதம் என்று ஒருவருக்கும் தெரியவில்லை.

ஒருவர் வேகமாக ஏரிக்கரைக்குச் சென்று பார்த்தார். அங்கு திருப்பூக்குடலை மரத்தின்மேல் மாட்டியது மாட்டியபடியே இருந்தது.

அன்று மத்யாஹ்நம் பக்கத்து க்ராமத்திற்குச்சென்று திரும்பிய ஒரு ஸ்வாமியால்தான் நடந்தவிஷயம் தெரியவந்தது.

கருடபுரம் ஸ்வாமி அநுஷ்டாநத்திற்கு எழுந்தருளும்போது தம் ஆசார்யன் நியமித்தபடி 'ஸந்யாஸப்ராப்தி எப்போது உண்டாகுமோ' என்று சிந்தித்த ஸமயத்தில் மேலே தலைக்குநேரே வட்டமிட்டுக் கொண்டிருந்த திருவடி நயினார் (கருடன்) சப்தித்தாராம். அதுவே பகவானுடைய நியமனம் என்று திருவுள்ளம்பற்றிய அந்த ஸ்வாமி நேரே அடுத்த க்ராமத்தில் எழுந்ருளியிருந்த ஒரு ஸந்யாஸி ஸ்வாமியிடம் சென்று அவரிடம் காஷாயம் பெற்றுக்கொண்டாராம்.

இந்தஸ்வாமிதான் ப்ரஸித்திபெற்ற கருடபுரம் ஸ்வாமியென்னும் ஸ்ரீநிவாஸமஹாதேசிகன். இவருடைய ஆத்மகுணங்களின் சிறப்பு வர்ணனைக்கு அடங்காது.

இந்த ஸ்வாமி திருநாட்டையலங்கரித்து ஆறு வர்ஷங்களாகின்றன. சென்ற சித்திரைமீ க்ருஷ்ணத்விதியையன்று இவருடைய ஆறுவது வார்ஷிக [illegible] மஹோத்ஸவம் மதுராந்தகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸதுபதேசம்

[ஸ்ரீ அஹோபில மடம், ஆஸ்தாந வித்வான்,
ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, திருவள்ளூர்.]

ஆசா—ஆகையால் பகவானல் அவரவர்களுடைய புண்யபாபங்களுக்குத் தகுந்தபடி கொடுக்கப்பட்ட உடல்களிலுள்ள ஸத்வகுணம் ரஜோகுணம் தமோகுணம் என்று சொல்லுகிற குணங்களுடைய வித்யாஸங்களினல் அந்தந்த உடல்களுக்கு உயர்வுதாழ்வு என்பதை சாஸ்த்ரங்களில் சொன்னபடி ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நம் 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் உபந்யாஸத்தை மறுபடியும் கவனித்துப் பார்த்துக்கொள்ளு. ஸந்தேஹம் போய்விடும். மறுபடியும் ஸந்தேஹம் வராது.

சிஷ்—ஸ்வாமிந்! இந்த ஸ்தூல சரீரத்திலிருந்து கடைந்து எடுக்கப்பட்ட ஸூக்ஷ்ம சரீரத்தை விரஜாநதியில் விட்டுவிடுகிறுன் என்று சொன்னீர்களே அதற்கு ப்ரமாணம் (சாஸ்த்ரம்)என்ன? அதைச்சொல்லவேண்டும்.

ஆசா—நம் வேதாந்ததேசிகன் க்ரந்தமாகிற ரஹஸ்யத்ரயஸாரத்தில் கதிவிசேஷாதிகாரத்தில் 'ஸூக்ஷ்மசரீரத்தை விடுவித்து விரஜைக்கக்கரைபடுத்தி அப்ராக்ருத சரீரத்தைக் கொடுத்து ப்ரஹ்மாலங்காரத்தாலே அலங்கரிப்பித்து' என்று 'ஸ ஆகச்சதி விஜராம் நதீம்' என்கிற கௌஷீதகீ ப்ராஹ்மணத்தின்படி சொல்லியிருக்கிறுர்.

சிஷ்—ஸூக்ஷ்மசரீரம் வைகுண்டத்தில் உண்டா?

ஆசா — ப்ரக்ருதியின் பரிணமமான இந்த்ரியங்களாலும் பூத ஸூக்ஷ்மங்களாலும் பண்ணப்பட்ட இந்த ஸூக்ஷ்மசரீரம் விரஜாநதியோடேயே ஒழிந்துவிடுகிறது. வைகுண்டத்தில் ஸூக்ஷ்மசரீரம் கிடையாது.

சிஷ்—முக்தன் வைகுண்டத்தில் பகவானை எப்படி அநுபவித்து ஆநந்தமடைகிறுன்?

ஆசா—சரீரத்தோடு இருந்துகொண்டும் அநுபவிக்கிறுன், சரீரமில்லாமலிருந்துகொண்டும் அநுபவிக்கிறுன். அநுபவித்து ஆநந்திக்க ஜ்ஞாநந்தான் ஆத்மாவை விட்டுப் பிரியாமல் எப்போதும் இருக்கிறது என்று சொல்லியுள்ளேன். அநுபவிக்க ஜ்ஞாநம் போதும். சரீரம் வேண்டுமென்று நிர்பந்தமில்லை. 'ஸ ஏகதா பவதி' 'அசரீரம் வாவ ஸந்தம்' என்று முக்தனைப்பற்றிய ச்ருதி.

சிஷ்—அவர்களுடைய சரீரம் எதனல் பண்ணப்பட்டது?

ஆசா— சொல்லிக் கொடுத்திருப்பதை மறந்துவிட்டு திருப்பித்திருப்பிக் கேள். கர்மத்தால் கட்டுப்பட்டுக் கிடக்கிற ஜீவாத்மாக்களுக்கு ப்ரக்ருதியால் பண்ணப்பட்ட உடல். இதற்கு ப்ராக்ருத உடல் என்று பெயர். முக்தியடைந்தவர்களுக்கும் நித்யஸூரிகளுக்கும் பகவானுக்கும் ஏற்படக் கூடியதாகவும், உள்ளதாகவும், இருந்து அழிந்ததாகவும் உள்ள உடல்கள் சுத்தஸத்வம் என்கிற ஸத்வகுணம் மாத்ரம் உள்ள ஒரு வஸ்துவால் பண்ணப்பட்டது என்று மனத்தில் வைத்துக்கொள். வைகுண்டலோகம், அங்கிருக்கும் மண்டபம், கோபுரம் முதலியன வெல்லாம் அந்த சுத்தஸத்வம் என்று பெயருடைய வஸ்துவின் பரிணமந்தான். அவைகளும் அப்ராக்ருத சரீரமென்றும் அப்ராக்ருத வஸ்துக்களென்றும் பெயர். ஸூக்ஷ்மசரீரமென்று பெயர் கிடையாது.

சிஷ்—இந்த ஸூக்ஷ்மசரீரத்தை வைத்துக்கொண்டே தோஷத்தைமாத்ரம் எடுத்துவிட்டால் கார்யம் ஸுலபந்தானே? ஏன் அப்படிச்செய்யக்கூடாது?

ஆசா— இதை விரஜையில் விட்டுவிடுகிறுனென்றும் பிறகு வேறு சரீரம் வருகிறதென்றும் இருக்கிற சாஸ்த்ரப்படி உனக்கு நான் சொன்னேன். ஏன் வைத்துக்கொள்ளக்கூடாது என்றுல், ஸ்வதந்த்ரனன பக

வானைக் கேட்கிறேன் அவன் என்ன பதில் சொல்லுகிறானோ பிறகு அதை உனக்குச் சொல்லுகிறேன். எனக்குத்தோன்றுகிற ஸமாதானம் ஒன்று. வெங்காயம், உள்ளிப் பூண்டு முதலியதுகளின் துர்வாஸனைகளை முழுவதும் எடுத்துவிட முடியாததுபோல் ப்ரக்ருதி பரிணாமமான ஸூக்ஷ்மசரீரத்தில் உள்ள ரஜோகுண தமோகுணங்களைக் குறைக்கலாமேயொழிய முழுவதையும் எடுத்துவிட முடியாது. ஏனென்றால் பகவான் தன்னைத் தான் அழித்துக்கொள்ளாததுபோல் தத்வங்களையும் மாற்றுவதில்லை. ஆகையால் ப்ரக்ருதியினுடைய பரிணாமமான எந்தவிதமான உடல்களோடும் வைகுண்டத்திற்குப் போக முடியாது. பகவான்கொண்டுபோய்வைத்தாலும் அதிகநாள் இருக்கமுடியாது. பூர்ணமான ஆநந்தமும் கிடையாது.

சிஷ்—வைகுண்டத்தில் முக்தனுக்கு உடல் எப்படி வருகிறது.

ஆசா—வேண்டுமானால் தானே தனக்கு ஸ்ருஷ்டித்துக்கொள்கிறான். அந்த உடல்களை அடிக்கடி விட்டுவிட்டு வெவ்வேறு உடல்களை முக்தன் எடுத்துக்கொண்டாலும் பரிபூர்ணமான ஆநந்தத்தில் எள்ளவுகூட குறைவு கிடையாது. இது நம் விசிஷ்டாத்வைதத்தில் சொல்லப்பட்டிருக்கிற விஷயம். இந்த விஷயங்களில் ராமாநுஜஸித்தாந்தத்தை நன்றாக அறிந்தவர்கள் யாராவது கேள்வி கேட்டால் ஸமாதானம் சொல்லுவது வெகு ஸுலபமாகயிருக்கும். இல்லாவிட்டால் நம் மதத்தை அவர்களுக்கும் தெரியப்படுத்தி பிறகு ஸமாதானம் சொல்லவேண்டியிருக்கிறது. நம் மதத்திலுள்ள விஷயங்களை நம்மைச்சேர்ந்தவர்கள் தெரிந்துகொள்வதற்காக இந்த வ்யாஸம் எழுதவாரம்பித்தது. அதில் பிசகிருந்தால் ஸமாதானம் சொல்லுவது ந்யாயமாகும் என்று தோன்றுகிறது. நம் ஸித்தாந்தத்தில் கேள்விகள்கேட்டால் நம் ஆசார்யர்கள் சொல்லியிருக்கிற இடங்களை எடுத்துக்காட்டினால் போதும். இல்லையேல் பெரிய வாக்யார்த்தமல்லவா தொடங்கிவிடும்.

சிஷ்—நான் எதற்காக இந்தவிஷயம் கேட்டேனோ அதை நீங்கள் எப்படி தெரிந்துகொண்டீர்கள்?

ஆசா—எனக்கு ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா பத்ராதிபர் ஸ்வாமியிடமிருந்து வித்வான் ப்ரஹ்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்த்ரியார் அவர்கள் கேட்டிருந்த பத்ரிகை வந்தது. நீ கேட்ட விஷயமும் அதிலிருந்தவிஷயமும் அனேகமாக ஒன்றாகயிருந்தபடியால் அந்த கடிதத்தின் ஸமாசாரம் உனக்கும் எட்டியிருக்கும் என்று நினைக்கிறேன்.

சிஷ்—ஸ்வாமிந்! இந்த ப்ரஹ்மாண்டத்தில் ஸகல ஜீவராசிகளுக்கும் அந்தந்த ஜீவாத்மாக்கள் செய்த புண்ய பாபங்களுக்குத் தகுந்தாற்போல் வெவ்வேறு மாதிரியான உடல்கள், செய்த புண்யங்களை அநுபவிப்பதற்காகவும் பகவானால் கொடுக்கப்படுகிறதுகள் என்று உபதேசம் செய்தீர்களே? அப்படியானால் ஸ்ருஷ்டி செய்கிறவன் ப்ரஹ்மதேவன் என்று சொல்லுகிறார்களே அது எப்படி பொருந்தும்?

ஆசா— ப்ரஹ்மா செய்த தபஸ்ஸுக்கு பலமாக பெரியதான பதவியைக்கொடுத்து அந்தந்த ஆத்மாக்கள் செய்த புண்யபாபகர்மங்களுக்குத் தகுந்தபடி லோகங்களையும் அந்தந்த லோகங்களில் வஸிக்க புண்யபாபங்களைச் செய்த ஆத்மாக்களுக்குத் தகுந்தபடி அநேகவிதமான சரீரங்களையும் உண்டுபண்ண சக்தியையும் எல்லாவிதமான சரீரங்களையும் ஸ்ருஷ்டி செய்ய தெரிந்துகொள்வதற்குத் தகுந்த சாஸ்த்ரங்களையும் உபதேசம் செய்து ஸ்ருஷ்டிகர்த்தா வென்கிற பட்டத்தையும் கொடுத்து மேல் விசாரணையை பகவான் வைத்துக்கொண்டு இருக்கிறபடியால் ஸகல வஸ்துக்களும் பகவானால் ஸ்ருஷ்டிக்கப்பட்டது என்றும், வேலைக்காரராக இருந்து ப்ரஹ்மா ஸ்ருஷ்டிக்கிறபடியால் எல்லா வஸ்துக்களையும் ப்ரஹ்மா ஸ்ருஷ்டிக்கிறார் என்றும் லோகத்தில் சொல்லுகிறார்கள். சாஸ்த்ரங்களிலும் சொல்லப்பட்டு இருக்கிறது.

சிஷ்— அடியேன் பரிஹாஸம் செய்வதற்காக கேட்பதாக நினைத்துக்கொள்ளக்கூடாது. எங்கள் தகப்பனாருடைய உடல் என்னுடைய தாதா பாட்டியால் உண்டுபண்ணப்பட்டது; என்னுடைய உடல் என் தாய் தகப்பனால்

உண்டுபண்ணப்பட்டது; என் பிள்ளையின் உடல் என்னாலும் என் மனைவியாலும் உண்டு பண்ணப்பட்டது; பிள்ளையின் உடல் நன்று யிருப்பதற்காகவும், குணம் முதலியதுகள் நன்றாக இருப்பதற்காகவும், ஶாஸ்த்ரத்திற்கு விரோதமில்லாத உயர்ந்த உத்தமமான ஸாத்விகமானதாகவும், பகவானுக்கு நிவேதநம் செய்ததாகவும் உள்ள ஆஹாரங்களை சாப்பிட்டு அதனால் ஏற்பட்ட எங்கள் தேஹவலிவால் உண்டுபண்ணப்பட்டது என் புத்ரன் உடல். இப்படியேதான் தெரிந்தவரையில் எல்லா உடல்களும் அந்தந்த தாய் தகப்பன்களால் உண்டுபண்ணப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படியிருக்க ப்ரஹ்மதேவனை ஸ்ருஷ்டிகர்த்தா வென்றும், பகவானை அவருக்கு மேல் ஸ்ருஷ்டிகர்த்தா வென்றும் சொல்லுவது எப்படி ந்யாயமாகும்? எனக்கு நன்றாகப் புரிந்துக் கொள்ளும்படி உபதேசம் செய்ய வேணடும்.

ஆசா— நீ ஆச்சர்யமான கேள்விகேட்டு விட்டாய். ஸமாதானம் சொல்லுகிறேன் கவனித்துக்கேள். கீதையில் 16 வது அத்யாயத்தில் ஆஸுரஸ்வபாவமுள்ளவர்கள் சொல்லக் கூடிய அநேக விஷயங்களில் நீ கேட்ட கேள்வி மாதிரி அவர்கள் கேட்பதாக சொல்லியிருக்கிறார். ‹அபரஸ்பரஸம்பூதம் கிமந்யத் காமஹைதுகம்› (8)[காமத்தினால் ஏற்படக் கூடிய ஆண் பெண்களுடைய ஸம்மந்தத்தினால் உண்டாகிற வஸ்துக்கள் தவிர வேறு வஸ்துக்கள் என்ன இருக்கிறதுகள்] என்று. அதைப் போல் உன் கேள்வி யிருந்தாலும் நீ அவர்கள் போல் அல்ல. அவர்கள் என்ன ஸமாதானம் சொன்னாலும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். ஸரியான ஸமாதானம் சொன்னால் நீ ஒத்துக் கொள்ளுவாய். முதலில் ஒரு உதாஹரணம் சொல்லிவிட்டு பிறகு சொல்லுகிறேன். பூமியை முழுதும் ஆள்கிற ஒரு மஹாராஜாவுக்கு ஒரு எண்ணம் உண்டாயிற்று. அதாவது தன்னுடைய ராஜ்யத்தில் எல்லா இடங்களிலும் அநேகவிதமான மரம் செடி கொடி முதலியதுகளை வ்ருத்திபண்ணவேண்டும் என்று. உடனே வைஸ்ராய்க்கு உத்திரவு போட்டான். அந்த வைஸ்ராய் தன் அதிகாரத்திற்கு கீழ்ப்பட்ட அநேக மந்த்ரிகளுக்கு உத்திரவு போட்டான். அம்மந்த்ரிகள் தங்களுக்கு அடங்கின அநேகம் உத்யோகஸ்தர்களுக்கு உத்திரவுபோட்டார்கள். அவர்கள் தங்கள்தங்கள் இலாகாக்களில் உள்ள ஜில்லா கலெக்டர் முதலானவர்களுக்கு உத்திரவு போட்டார்கள். இப்படியே வரிசையாக உத்யோகஸ்தர்கள்மூலம் கிராம அதிகாரிகளுக்கும் உத்திரவு கிடைத்தது. அவர்கள் கிராம வாஸிகளுக்கு உத்தரவு செய்தார்கள். கடுமையான எல்லாருடைய உத்திரவுகளாலும் அந்த அரசன் நினைத்தபடி எங்கு பார்த்தாலும் அநேகவிதமான மரங்கள் செடிகள், கொடிகள் வ்ருத்தியாகி மழை பெய்து ராஜ்யம் செழித்து விட்டது. இந்த மரங்கள் முதலானதுகளை உண்டுபண்ணினதிற்குக் காரணம் யார் தெரிகிறதா? முதல் முக்யமான காரணம் மஹாராஜா. அடுத்தது அவர் உத்திரவுப்படி நடந்த வைஸ்ராயும் காரணந்தான். இப்படி எல்லோரும் காரணமாக இருந்தாலும் முக்யமான சில பெரிய அதிகாரிகளை அதற்குக் காரணமாகச் சொல்லுவார்கள். இப்பொழுது சில விஷயங்களில் சொல்லுகிறார்கள் அல்லவா? அதைப்போல் கடவுள் என்ன செய்தார் தெரியுமா? அந்தந்த ஜீவாத்மாக்கள் செய்த புண்ய பாபங்களுக்குத் தகுந்தபடி உடல்களைக் கொடுத்து ரக்ஷிக்க நினைத்து அதற்கு சில கார்யங்களைச் செய்து பிறகு ப்ரஹ்மதேவனை உண்டு பண்ணி அவரிடத்தில் இந்த வேலையை ஒப்புவித்தார். அந்த ப்ரஹ்மதேவன் பகவானிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு இந்த மாபெரும் கார்யத்தைச் செய்வதற்காக ப்ருகு மஹர்ஷி முதலான ஏழு ரிஷிகளை தனக்கு ஒத்தாசைக்காக உண்டுபண்ணி அவர்களுக்கு ஜீவாத்மாக்களுக்கு உடல் உண்டுபண்ணுகிற வேலையை நன்றாய்த் தெரிந்துக்கொள்ளும்படி உபதேசித்தார். பிறகு அந்த மஹர்ஷிகள் நீ கேள்வி கேட்டமாதிரி அந்தந்த தாய் தந்தைகள் மூலம் உடல்களை உண்டுபண்ணி விடுகிறார்கள். நன்றாக மனத்தில் வைத்துக்கொள். இதற்கு முதல் காரணம் பகவான்; இரண்டாவது ப்ரஹ்மதேவன்; மூன்றாவது ஏழு ம

ஹர்ஷிகள்; பிறகு தாய் தந்தைகள். இப்படி இருந்தாலும் முன் உதாஹரணத்தில் சொன்னது போல் பகவானையும் முக்ய அதிகாரியான ப்ரஹ்மதேவனையும் லோகத்தில் சொல்லுகிறார்கள். ஶாஸ்த்ரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. கீதையில் பத்தாவது அத்யாயத்தில்

'மஹர்ஷய: ஸப்த பூர்வே
சத்வாரோ மனவஸ்ததா ।
மத்பாவா மானஸா ஜாதா:
யேஷாம் லோக இமா: ப்ரஜா: ॥'(6)

என்று கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்திருக்கிறார்.

[ப்ருகு முதலான ஏழு மஹர்ஷிகள், நான்கு மனுக்கள் ப்ரஹ்மதேவனுடைய மானஸ புத்ரர்கள். அதாவது— மனஸ்ஸினாலேயே ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்கள். இவர்கள் எல்லா ஜீவாத்மாக்களுக்கும் அவரவர்களுக்குத் தகுந்த உடல்களைக் கொடுத்து ரக்ஷிக்கவேண்டும் என்கிற என்னுடைய அபிப்ராயத்தை அனுஸரித்து கார்யம் செய்கிறவர்கள். ஏழு மஹர்ஷிகளும் ப்ரஹ்மாவுக்கும் கீழ்ப்பட்டு ஸ்ருஷ்டி செய்கிறவர்கள். நான்கு மனுக்களும் ரக்ஷிக்கிறவர்கள்.] ஆசைய ல் எந்தெந்த மஹர்ஷிகளுடைய லோகங்களில் எந்தெந்த விதமான உடல்களோடு ஜீவாத்மாக்களுக்குப் பிறப்பு ஏற்பட்-டிருந்தா லும் அந்தந்த உடல்களை அவரவர்களுடைய தாய் தந்தைகள் மூலமாகவோ அல்லது தங்கள் யோகசக்தியினாலேயோ உண்டுபண்ணினவர்கள் அத்ரி, ப்ருகு, குத்ஸர், வஸிஷ்டர், கௌதமர், காச்யபர் ஆங்கீரஸர் என்கிற ஏழு மஹர்ஷிகள் தான். உண்டுபண்ணப்பட்ட வஸ்துக்களை ரக்ஷிக்கிறவர்கள் நான்கு மனுக்கள் தான் என்று அர்த்தம். ஆகையால் கடவுளுடைய ஆஜ்ஞையினால் இவைகள் எல்லாம் நடக்கிறபடியால் எல்லாவற்றையும் ஸ்ருஷ்டி செய்கிறவர் கடவுளே என்று சொல்லவேண்டும். அவருடைய முக்ய அதிகாரியாகயிருந்து ப்ரஹ்மா ஸ்ருஷ்டிக்கிறபடியால் அவரையும் ஸ்ருஷ்டி கர்த்தா என்று சொல்லுகிறோம்.

உன்னுடைய புத்தி நன்றாக நிலைப்பதற்காகச் சில விஷயங்கள் சொல்லுகிறேன். தாய் தகப்பனுடைய ஸம்பந்தம் உண்டாகிறபோதெல்லாம் குழந்தைகள் பிறக்கின்றனவா? சில தாய் தந்தையர்கள் இருக்கிற குழந்தைகள் போதும் என்று நினைக்கிறார்களல்லவா? அந்த எண்ண முடையவர்கள் காமவிகாரத்தினால் ஒன்றுசேர நேர்ந்துவிட்டால் மேலும் குழந்தைகள் பிறந்து விடுகிறதுகளல்லவா? இதுகளை நன்றாக யோசித்துப் பார்த்தால் தாய் தந்தைகளுடைய இஷ்டப்படி இல்லை என்றுதானே சொல்லவேண்டும். இவர்கள் செய்திருக்கிற முன்வினைப்படி ஸ்ருஷ்டிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற அதிகாரிகள் மூலம் பகவானுடைய இஷ்டப்படித்தான் தாய்தகப்பன்களுடைய ஸம்பந்தம் ப்ரயோஜனப்படுகிறது என்று ஶாஸ்த்ரத்தை நம்பினவர்கள் கட்டாயம் ஒத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. தவிர தலையில் பேன்கள் உண்டாகிறது; அங்கு எந்த தாய்தந்தைகள்? சாணியில் தேள் உண்டாகிறது; அங்கு யார் தாய் தந்தை? ஊர்காய் முதலானதுகளில் புழுக்கள் உண்டாகிவிடுகிறதுகள்; அங்கு தாய்தந்தைகள் உண்டா? ஒருவிதையிலிருந்து ஒரு மரம் உண்டாகிறது; அந்த மரம் ஒரு ஜீவனுடைய உடல் என்று உனக்கு முன்னமே தெரியுமல்லவா? அங்கு எந்த தாய்தந்தை? கல்லுக்குள் தேரை என்று ஒரு ஜந்து உண்டாகிறது; எந்த தாய் தந்தையின் சேர்க்கையால் இவை உண்டாயிற்று? இப்படியே இன்னும் பல உள. ஆகையால் எந்த இடங்களில் எந்தமாதிரி உடலோடு ஜீவாத்மா இருந்தாலும் எல்லா உடல்களையும் உண்டுபண்ணினவர்கள் முன்சொன்ன அதிகாரிகள் மூலம் பகவான்தான் என்று தெரிந்துக்கொள்ளு. நன்றாக தெரிதுக்கொண்டு இருப்பாய் என்று நினைக்கிறேன். புரியாவிட்டால் நான் சொன்ன விஷயங்களை இரண்டு மூன்று தடவை யோசித்துப்பார்; நன்றாகத் தெரிந்துவிடும். அப்படிச் செய்தும் ஸந்தேஹமிருந்தால் பிறகு கேள் சொல்லுகிறேன்.

சிஷ் — அநேகமாகத் தெரிந்துவிட்டது. ஆனாலும் சில ஸந்தேஹம். ஆத்மாக்களுக்கு மரம் செடி கொடிகள் முதலின உடல் உண்டாகும்போது பதினொரு இந்த்ரியங்க

ளும் அந்த உடலில் இருக்கிறதுகளா? இல்லையா?

ஆசா — அறியுந்தன்மையுள்ள ஐந்து ஜ்ஞானேந்த்ரியங்களும், செய்யுந் தன்மையுள்ள ஐந்து கர்மேந்த்ரியங்களும், இந்த பத்து இந்த்ரியங்களுக்கும் கடிவாளம்போல் உள்ள மனஸ்ஸும் எல்லா உடல்களிலும் கட்டாயம் இருக்கிறதுகள்.

சிஷ் — அப்படியானால் செடிகொடிகள் ஏன் நடக்கிறதில்லை? வந்தவர்களோடு பேசுகிறதில்லை?

ஆசா — என்னடா பெரிய ஸந்தேஹம். மனிதஉடலில் எல்லா இந்த்ரியங்களும் இருப்பதில் உனக்கு ஸந்தேஹமில்லையே? அப்போதுகூட சிலவிஷயங்களை கவனித்துப்பார். ஒரு உடலில் கண் என்கிற கருவி உபயோகப்படுகிறதில்லை; ஓரிடத்தில் காது என்பது உபயோகப்படுகிறதில்லை; ஒரு உடலில் பேச வாக்கு என்கிற கருவிக்கு சக்தியில்லை; கால் என்கிற கருவி ஓரிடத்தில் உபயோகப்படுகிறதில்லை. இதைப்போல் இன்னும் அநேக விஷயங்கள் நீ பார்த்திருக்கிறாயல்லவா? காரணம் என்ன சொல்லலாம்? அந்த உடலுக்குள்ளே இருக்கிற ஆத்மா பண்ணின பாபங்கள் தவிர வேறு என்ன காரணம் சொல்லமுடியும்? அதைப்போல் மரம் செடி கொடி முதலான சிலஉடல்களில் ஆத்மாக்கள் முன் ஜன்மங்களில் பண்ணியிருந்த பாபங்களின் பயனாக எல்லா இந்த்ரியங்களும் இருந்தும் அந்தந்த இந்த்ரியங்கள் தங்கள் காரியங்களைச் செய்யமுடியாமல் போய்விட்டபடியால் நடக்கமுடியவில்லை பேசமுடியவில்லை தெரிந்து கொள்ளமுடியவில்லை.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

கரஹு ஆடிமீ : 1951ஹு ஜுலை - ஆகஸ்ட்மீ

[தக்ஷிணாயனம் க்ரீஷ்ம ருது- கடகமீ]

17—7—51 1உ செவ்வாய்க்கிழமை ... சூன்யதிதி
18—7—51 2உ புதன்கிழமை ... ,,
ஸ்ரீ அழகியசிங்கர்களின் ஸங்கல்ப்பமஹோத்ஸவம்
29—7—51 13உ ஞாயிற்றுக்கிழமை ... ஸர்வ ஏகாதசி
2—8—51 17உ வியாழக்கிழமை ... ஸர்வ அமாவாஸ்யை
புஷ்யம் ஸ்ரீ அஹோபிலமடம் 36ம் பட்டம் (பரந்தூர்)
ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
5—8—51 20உ ஞாயிற்றுக்கிழமை ... திருவாடிப்பூரம் ஆண்டாள் திருநக்ஷத்ரம்
13—8—51 28உ திங்கட்கிழமை ... ஸர்வ ஏகாதசி
15—8—51 30உ புதன்கிழமை ... த்ரயோதசி சதுர்த்தசி திதித்வயம்
உத்திராடம்: ஸ்ரீ ஆளவந்தார் திருநக்ஷத்ரம்
16—8—51 31உ வியாழக்கிழமை ... கடக பூர்ணிமை திதி ருக்யஜுருபாகர்மம்
17—8—51 1உ வெள்ளிக்கிழமை ... சூன்யதிதி காயத்ரீ ஜபம் ஸிம்மரவி 6-58
(இன்று ஸிம்ம ஸங்க்ரமண தர்ப்பணம்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரவரமுநயே நம:

தான் ஆட்பட்டதையுகக்கும் தண்டமிழ்வேந்தன்

[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவஹீந்த்ரபுரம்.]

"ஆளும் பணியுமடியேனைக் கொண்டான்
விண்டநிசாசரரைத்
தோளும் தலையும் துணிவெய்தச் சுடுவெஞ்
சிலைவாய்ச் சரந்துரந்தான்
வேளும் சேயும் அனையாரும் வேற்கணாரும்
பயில்வீதி
நாளும் விழவினொலியோவா நறையூர்நின்ற
நம்பியே'

தனக்கு மிகுந்த அன்பு கரைபுரண்டோடுமிடத்தில் தன்னிலை மறந்து நிற்றல் உலக வியல்பு. அதிலும் சாதாரணமானவர்கள் விஷயத்தைக் காட்டிலும் பக்தர்கள் விஷயத்தில் இது கண்கூடு. பக்தர்களிலும் பத்ததசையை விடாதவர்களைக்காட்டிலும், நித்யாநந்ததசையை இங்கேயேயடைந்த முக்தர்களாகிய ஜ்ஞாநநிதிகளை நோக்குங்கால், அவர்களுடைய அருள் மொழிகளும், அதன் மூலம் நமக்குத் தெளியக்கிடக்கிற அவர்களுடைய நினைவுச்செல்வமும், புகுந்து தேடத்தேட, தேடிப்பருகப் பருக வற்றாததோர் அமுதப்பெருங்கடலேயாகும். அப்படிப்பட்ட ஓர் பக்தசிகாமணியடைந்த நிலையை அன்னாருடைய சொல்லமுதத்தின் மூலம் விளக்குகிறது மேலே காட்டப்பட்ட பாசுரம். மேற்கண்ட பாசுரம் சோழநாட்டின்கண்ணுள்ள திருநறையூரின்கண் அமர்ந்து பக்தர்களுடைய தீமைகளைப்போக்கி நிரதிசயாநந்தம் அருளும் நம்பி எம்பெருமான் விஷயமாக ஸர்வேச்வரனிடத்தில் ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணின தண்டமிழ் வேந்தனாகிய திருமங்கையாழ்வார் அருளிய பாசுரமாகும்.

'அழகில் மன்மதனையும், வீரத்தில் ஸ்கந்தனையும் போன்ற ஆடவர்களும், கூரிய வேல் போன்ற கண்களையுடைய பெண்களும், ஸஞ்சரிக்கும் திருவீதிகளையும், என்றும் நீங்காத திருவிழாக்களின் ஒலியையும் உடைய திருநறையூரில் நின்றருளும் பரிபூர்ணனான ஸர்வேச்வரன், ஒருகாலத்தில் மலைபோன்ற இராக்கதர்களுடைய தோள்களும் தலையும் துணிந்து போம்படி தனது சார்ங்கத்தில் அதிக்ரூரமான பாணங்களைத் தொடுத்து விடுத்தான். அவனே யடியேனையாட்கொண்டு அடியேனது கைங்கர்யத்தையும் ஏற்றுக்கொண்டான்' என்பது இப்பாட்டில் வெளிப்படையாகத் தோன்றும் பொருள்.

இனி இப்பாட்டில் ஆழ்வார் அடைந்த அநுபவமும், அதனால் இப்பாட்டில் தெரியும் அவருடைய மனோபாவமும் ஆராயத்தக்கது.

ஸ்வாமி திருமங்கையாழ்வாருக்கு திருநறையூர் நம்பி பஞ்சஸம்ஸ்காரம் செய்தருளிய ஆசார்யனாவர். அப்படிப்பட்ட எம்பெருமானை மங்களாசாஸநம் செய்யும்போது எம்பெருமானுடைய விபுத்வமும், பரத்வமும் அவர் லோகரக்ஷணார்த்தமாகப் புரிந்துள்ள அளவற்ற பெரும் செய்கைகளையும் த்யானிக்கிறார் திருமங்கையாழ்வார். அதேபொழுதில் ப்ரஹ்மாதிகளுக்கும் அகோசரமான அப் பரம் பொருள் தன்னையாட்கொண்டு தனக்கு பஞ்சஸம்ஸ்காரம் செய்தமையும், தான் செய்யும் கைங்கர்யங்களை ஏற்றுக்கொள்ளும் எளிய தன்மையும் ஒருங்கேவந்து தோன்றுகின்றன. உள்ளங்கசிந்தார் கலியன். அவரது மனோபாவம் எல்லைமீறிப்போகிறது. அத்துடன் நிற்கவில்லை நாம் பாடிக்கேட்டு அநுபவிக்கவும் பாசுரமாகவும் வெளிப்படுகிறது அவரது திருவாக்கிலிருந்து.

ஸர்வேச்வரனது ஸாக்ஷாத் புத்ரனாகிய மன்மதனும், அவன் போன்ற பலரும் மிகவும் மலிந்து உலவும் திருவீதியுடையானாகிய திருநறையூரெம்பிரான் தன்னையே விரும்பியாட்கொண்டான். ஆதலால் அப்பரம்பொருளினிடம் பஞ்சஸம்ஸ்காரம் செய்துகொண்ட உரிமையும் பெருமையும் தன்னொருவரைத் தவிர மற்றையொருவர்க்கும் இல்லை என்று உள்ள நிறைவு தோன்றப் பாடுகிறார். 'ஆளுமடி

யேனைக்கொண்டான் வேலுமனையாரும் பயில் வீதி நறையூர் நின்றநம்பி' என்று.

மேலும் இறைவனெம்பிரான் தனது திருக் கரங்களில் திருவாழியாழ்வானையும் பாஞ்ச சன்னியத்தையும் எப்போதும் எங்கும், அடியார்களுக்கு அருள்மழை பொழிந்திட எழுந்தருளும்போதுகூட விட்டுப்பிரியாமல் ஏந்திக்கொண்டேயிருக்கவும் த்ரிலோக கண்ட கர்களான ராவணுதிகளை நிரஸிக்கும்பொருட்டு எழுந்தருளுங்கால் அவைகளை யாயுதங்க ளாகக் கொண்டானில்லை. அன்றியும் தனது ஏவல்களை இமைப்பொழுதில் நிறைவேற்றத் தேவர்களும் தேவஸேனுபதியாகிய ஸ்கந்த னும் இன்னும் அவன் போன்ற வீரர் பலரும் எப்பொழுதும் தம்மைச் சூழ்ந்திருப்பினும் அவர்களைக்கொண்டும் தன் கார்யமான அஸுர நிரஸநத்தை நடத்திக்கொண்டானில்லை. ஆனுல் சார்ங்கமான தமது திருக்கார்முகத்தையே துணையாகக்கொண்டு ராக்ஷஸவதம் செய்தரு ளினுன் என்று யுகாந்தரத்திலும் தன்னை யடிமைகொண்டு தனது திருப்பணிகளையுகந்து ஏற்றுக்கொண்ட வெம்பிரானது கருணையை ஸ்ரீ சார்ங்காம்சரான திருமங்கையாழ்வார் மிகப்பெருமையுடன் பேசுகிருர், 'சேயுமனை யாரும் வேற்கணுரும் பயில்வீதி நறையூர்நின்ற நம்பி விண்டநிசாசரரைத் தோளும் தலையும் துணிவெய்த சுடுவெஞ்சிலைவாய்ச் சரந்துரந் தான் பணியுமடியேனைக்கொண்டான்' என்று.

தவிரவும் ஸ்வாமியின் ராமாவதாரத்தில் ஸ்ரீசார்ங்கமாகிய தன்னையே விரும்பிப் பணி கொண்டவர், இப்போது தனக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து தன்னையாட்கொண்டருளி யதுபோல் அப்போது தன்னைக்கணமும் விட் டுப் பிரியாது கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்த இளையபெருமாளுக்கும், தன்னைச்சரணடைந்த எண்ணிறந்த முனிவர்களுக்கும் அருள்செய்தா ரில்லையென்று தான்பெற்றபேற்றை யுன்னி யுணர்ந்துமுகந்தும் பேசுகிருர் என்றும் கொள் ளத்தகும். கடைசியில் இப்படிப்பட்ட எம் பெருமான் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரம் எப்பொழுதும் திருவிழாக்களுடனும் மங்காத புகழுடனும் விளங்குகிறது என்று பாடுகிருர் 'நாளும் விழாவினெலியோவா நறையூர் நின்ற நம்பியே' என்று (ஒலி-புகழ்) அன்றியும், இப் படிப்பட்ட எம்பெருமான் எழுந்தருளியிருக் கிற ஸ்தலம் என்றும் திருவிழாக்களுடனும் இனிய புகழுடனும் விளங்கக்கடவது என்று மங்களாசாஸனம் செய்கிருர் மங்காதசீர்ப் பரகாலன்.

கற்பனைக்குமெட்டாத கவிக்களஞ்சியமாகிய கலியனது பாக்களில் மதிப்பிற்கெட்டா மாணிக் கங்கள் புதைந்து மறைந்துள்ளன. ஆராய்ந் தெடுத்து அறிந்தனுபவிப்பது பெரியோர் கடமை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

புயலும் பொறுமையும்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. கல்யாணபுரம் S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், M.A., வித்வான், L. T., திருவையாறு.]

பார்த்தஸாரதியின் ஸஹோதரியின் பெண் ஓர் விதவை. நாற்பதுவயதிருக்கலாம். தன் முப்பதாம்வயதில் நாலாயிரம் ரூபாய் ஜீவனும் சத்தூடன் வேறு துணையற்றுத் தன் மாமா வை அடைந்தாள். இந்தப்பணம் பரம தரித் ரனுபார்த்தஸாரதியிடம்என்னகதி அடைந் திருக்குமென்பதைச் சொல்லவேண்டியதில்லை. விதவையான பத்மா நிர்கதியானுள். தெரு வில்நின்று பசியினுல் உயிர்துறக்கும் கதி வந் தது. பார்த்தஸாரதியின் மனைவி ஸ்வபாவ மான கொடுமைக் குணத்தாலும் அத்துடன் சேர்ந்த ஏழ்மை நிலையாலும் பத்மாவை வீட் டைவிட்டு வெளியே விரட்டினுள். பத்மாவும், பெரும்பாலும் பசித்தே பொழுது போக்கு கிறகுடும்பத்தில்இருந்தும்பயனில்லைஎன்றுஸ்ரீ வேணுகோபாலனை நம்பிவெளியே கிளம்பினுள்.

யதுநாதன் கல்பவ்ருக்ஷம்போல் கைகாட்டினர். சுந்தரமையங்காரின் வீட்டில் வேலை செய்துகொண்டு அவர் ஸம்ஸாரத்திற்கு உற்றதுணையாயிருந்துவரும்படி அவளுக்கு ஒரு பிழைப்புஏற்படுத்தினர். மாதச்சம்பளம் வரும்படி செய்தார். பத்மா மிகவும் இளகிய மனமுள்ளவள். பார்த்தஸாரதியின் குழந்தைகளைக்கண்டு தன்னுலியன்ற உதவி செய்துவந்தாள். இதைக்கேட்ட பார்த்தஸாரதி ஒருநாள் 'திமிர்கொண்ட முண்டம்! என் ஏழ்மையைச்கண்டு இரங்குவதுபோல் என்னை அவமானப்படுத்துகிருளோ' என்று கர்ஜித்துக் குழந்தைகளை அவளுடன் பேசக்கூடாது என்று கட்டளை யிட்டான். அத்துடன் நில்லாமல் மஹாபாபி, 'யதுநாதனுடைய க்ருபாகடாக்ஷம் பத்மாவின்பேரில் விழுந்துவிட்டது. அவருக்கும் இன்பம், பத்மாவுக்கும் நல்லகாலந்தான்' என்று வம்பளக்க ஆரம்பித்தான். பாபிகளுக்கு ஜிஹ்வாக்ரத்தில் விஷம். கெட்டசொற்கள் விரைவில் பரவுமல்லவா? பத்மா துடிதுடித்தாள். யதுநாதன் கேட்டு நடுங்கி மருபடியும் ஸர்வேச்வரனிடம் அர்பணம்செய்த உள்ளத்துடன் புன்னகை கொண்டார்.

பாம்பு கடித்தவனைக் கொல்லும். பாபியின் வசைச்சொல் குறித்தவனையன்றி உடன் சேர்ந்தாரையும் வேரறுக்கும். என்னகாலமோ, யதுநாதனிடம் அவனுக்கு இத்தகைய வெறுப்பு! படிப்பு, குடும்ப அனுபவம், ப்ரத்யக்ஷப்ரமாணம் இவை ஒன்றுமே அவனது மனத்தைச் சிறிதும் நல்லமுறையில் மாற்றவில்லை. ஸ்ரீ ருக்மிணீகாந்தனை கோபாலன் வெள்ளேரியின் வீதிகளில் விஹிதமான தினங்களில் புரப்பட்டு வருவதும், ஏரிக்கரையில் வீற்றிருந்து தீர்த்தம் ப்ரஸாதிப்பதும் வெள்ளேரியின் தினஸரிக்கு ஒரு புத்துயிரளித்தது. வ்ராத்யத்தன்மையாலும் தலையேறிய நாஸ்திகத்தாலும் யதுநாதனிடம் வெறுப்பாலும் பார்த்தஸாரதி பகவானைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. மேலும் மாதவாசார்டர் வெளிப்படையாக யதுநாதனைப்புகழ்வதையும் அவருடன் கைகோத்துச் செல்வதையும் திருக்கோவிலின் திருவிழாக்களில் முன்னணியில் நிற்பதையுங் கண்டு அந்த தெய்வத்ரோகியின் உள்ளம் மறுகியது. 'பணத்திற்கு அடிமைப்படாதவர் யார்? மாதவாசாரையே வசப்படுத்திவிட்டான் மாயவஞ்சகன்! பணமிருந்தால்போதும் இந்த பாபி உலகத்திற்கு! மனிதத்தன்மையே எப்படி வேண்டுமானுலும் மாறும்போலிருக்கிறது. பணத்தின்முன் தலை சுழல்கிறது. நா தழதழத்து நிற்கிறது. உடல் நடுங்குகிறது. கண்கள் விரிகின்றன. மனம் துடிக்கிறது. கைகள் தாமாகவே கூப்பித் தொழுகின்றன. தன் மதிப்பு அழிகிறது. கர்வம் ஒடுகிறது. உறுதி தளர்கிறது. என்ன பணத்தின் பெருமை! நான்மாத்திரம் சிறிது தளர்ந்து பல்லைக்காட்டி விழித்தால் என்ன நிலை எய்தியிருக்கலாம்!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். இவன் தளராமல் திடமாக இருந்து எந்தக்குடும்பத்தைக் காப்பாற்றினுன்? எந்த ஸமூஹத்தின் நற்பெயரைக் காப்பாற்றினுன்? எந்த நாட்டின் புகழை நிலைநாட்டினுனே நாராயணனே அறிவான். அறிவினுல்— உலக அறிவினுல்— உலக மக்களுடன் ஒருங்கு வாழ்ந்து பிறர் தொண்டிலும் இன்பத்திலும் வாழ்ந்து வந்தால் தனக்கும் எத்துணை நன்மை! தன்னுடைய ஏழ்மைக்கும் தன் குழந்தைகளின் துயரத்திற்கும் தனக்குக் குழந்தைகள் அதிகரித்ததற்கும் யதுநாதன்போன்ற 'திமிர்கொண்ட பணக்காரர்களே' காரணம் என்று நம்பினுன். ஏழை எதுவேண்டுமானுலும் செய்யலாம்; பிறரை வையலாம்; அடிக்கலாம்; மானபங்கம் செய்யலாம்; ஏன்! ஏழை துயர்படுமாறு பிறர் பாக்யம் பெற்றிருக்கின்றனர்! தன்னை இக்கதிகண்ட ஸமூகத்தைத் தான் எப்படியாவது அவமதிக்க வேண்டுமென்றும் அதுவே தன் கடமை என்றும் நினைத்தான்.

இதுதான் ஆங்கிலப்படிப்பினுல் இவனடைந்த சிறந்த அறிவு. மேனுடுகளின் சரித்ரத்தையும் மேனுட்டு ஆசிரியர்களில் பலரது மொழிகளை மேற்கோளாகவும் காட்டுவான். இத்தகைய வன்மை கொண்ட பார்த்தஸாரதி தன்னுடைய தன் மதிப்புக் கொள்கையால் விளைவித்த இன்பம் யாது? பசியும் பிணியும் சன்

டையும் கண்ணீரும் புண்பட்டபேச்சுகளும் நம்பிக்கை இழந்த கண்களும்தான் விளைந்த பயனாயிற்று!! குழந்தைகள் யதுநாதனிடம் சென்றிருந்தால் யதுநாதனைத் தன் வீட்டிற்குள் நுழையச் சம்மதித்திருந்தால் அவனது வாழ்வே மாறி இவ்வளவு துயர் அடைந்திருக்க வேண்டியதில்லை. மூர்க்கர்கள் நன்மை தீமை அறியாமல் துரபிமானம் காரணமாகத் தங்களையும் கெடுத்துக் கொண்டு தங்களைச் சார்ந்தவர்களையும் அழிப்பார்கள்!! ஆனால் ஸர்வரக்ஷகன் கைவிடுகிறானோ! இல்லை! உபாயங்களைக் காட்டி உய்யும் வழியை உண்டுபண்ணியே வருகிறான். நிதி பொதிந்து கிடந்த நிலத்தின் மேல் ஒரு மனிதன் நித்யதாரித்ரியத்தால் மடிந்ததாகச் சொல்லும் கதைபோலாயிற்று பார்த்தஸாரதியின் நிலை. யதுநாதன் இருக்கும் ஊரில் துயருற்றவன் அவனே! பசியுற்றவன் அவனே! பசியிலும் வெறுத்தல் என்கிற செயலில் இன்பமடைந்தான். ஊரில் இரண்டொரு பணக்காரர்கள் வீட்டில் பணமும் நகையும் திருட்டுப்போயிற்று. சில வீடுகள் கொளுத்தப்பட்டன. இரண்டொரு 'மிராசுதாரர்' களுக்கும் குடியானவர்களுக்கும் ஏற்பட்ட தனிப்பட்ட வெறுப்பின் காரணமாக இவை நிகழ்ந்தன. ஆயினும் பார்த்தஸாரதி வாய்வழியாக வெளிப்பட்ட கொள்கைகளைக்கொண்டு அவனும் இதில் ஸம்பந்தப்பட்டதாக ஸந்தேஹிக்கப்பட்டான். மாணிககம்பிள்ளை என்பவனை முனியன்ஆசாரி என்பவன் அவமதித்துப்பேச, சிறந்த பணக்காரனான மாணிக்கம் அவனை மிகவும் இழிவாகப் பேச, முனியன் ஆசாரி மாணிக்கத்தை ஆத்திரங்கொண்டு அடிக்கவே அதன்விளைவாக தெய்வச்செயலாக மர்மநிலையில் அடிபட்ட மாணிக்கம் இறந்துபோனான். முனியன் ஆசாரிபோன்ற பரம ஏழைகளும் வாயாடிகளும் பணக்காரனை வைது இன்பமடையும் மக்களுக்கு நல்ல நண்பனான பார்த்தஸாரதியும் இதில் உளவாகக் கருதப்பெற்றான். முனியனைத் தூண்டித்தூண்டி மாணிக்கத்தைப் பலசமயங்களில் திட்டுமாறு செய்தவன் அவனே என்றும் மாணிக்கம்போன்ற பணக்காரப்பயல்கள் ஸமூக த்ரோகிகள் என்றும் அவர்கள் ஒழிந்தால்தான் ஏழைகளுக்கு இன்பம் என்றும் மாணிக்கத்தின் குடும்ப மானேஜர் வாக்குமூலம் கொடுத்தார். நிரபராதியான பார்த்தஸாரதி காவலில் வைக்கப்பட்டான். பார்த்தஸாரதியின் குடும்பம் என்னாவது? நிரபராதி அவன் காவலிலிருக்கவும் யதுநாதன் அவனது மனைவியிடம் சென்று அவளுக்குவேண்டிய ஆதரவுகள் செய்வதாகக்கூறி நிரபராதியான பார்த்தஸாரதியை விடுவிக்க முயர்ச்சிப்பதாகவும் கூறினார். வேதவல்லியென்ற அந்தப்பெண் கைகுவித்து 'ஸ்வாமி! நான் என்ன செய்வேன். எங்கள் குடும்பம் தத்தளிக்கிறது. குழந்தைகள் அழிகின்றன. உங்களிடம் உதவிபெற்றால் யோசிக்காமல் கொலைசெய்துவிடுவாரே' என்றாள். யதுநாதன் 'அம்மா நீ வருந்தாதே. பதிவ்ரதையாய் கணவனுக்குக் கீழ்ப்படியவேண்டுமென்பது ந்யாயமே. ஆயினும் குழந்தைகளைக் கொல்லுகிற இந்தக் கொடிய சோதனையில் உன்னறிவே உன்னைக் காப்பாற்ற வேண்டும். வேணுகோபாலன் க்ருபை வெள்ளமிட்டோடுகிறதம்மா. கங்கைக்கறையில் தாகத்தால் கலங்கலாமா? உங்களுக்குவேண்டிய உதவியைச் செய்கிறேன். செங்கற்பட்டிற்குச் சென்று அவரையும் என் சக்திகொண்டமட்டும் பார்த்து அவருடைய குற்றமின்மையை நிரூபித்து அழைத்துவரப் பார்க்கிறேன். கலங்காதேயம்மா' என்றார். அன்று அந்த வீட்டில் குழந்தைகள் வயிறார உண்டன. வேதம் மனக்கவலையுடன் சிறிது உண்டாள். குழந்தைகள் தெய்வச்சுடரின் சிறு பொறிகள்; அம்ருத பிந்துக்கள்; ஸத்ய ப்ரதிபிம்பங்கள்; தர்மத்தின் ஆவிஷ்காரங்கள்; பொறுமையின் ஜீவநாடிகள்; தந்தையின் துயரத்தைக் கண்டனவா? யதுநாதனின் திருமுகம் துயரால் பாழடைந்த அச் சிறு குடிலில் உதிக்கவும் இருள் விலகி இனிய நிலவுபரந்த ஜீவலோகம்போல அக் குழந்தைக் கூட்டம் குளிர்ந்து ஆரவாரித்தது. அன்பின் வலிமைஎன்னே! அருளின் மாய சக்திதான் என்னே!!

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

சாப்பாட்டுச் சண்டை

(ஒரு பெரியவரின் ஸமாதானம்)

[ஸ்ரீ அஹோபில மடம், ஆஸ்தாந வித்வான்,
ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, திருவள்ளூர்.]

ஒரு கல்யாண ஸந்தர்பத்தில் பெரியதோர் கலஹம் உண்டாகிவிட்டது. கைகலப்பதற்கு முந்தி 'போடா சாப்பாட்டுராமா!' என்று ஒருவன் சொல்ல, 'நீமட்டும் உதயத்தில் பதினைந்து இட்லி தின்னவில்லையோ?' என்று மற்றவன் கேட்க, இரண்டு சண்டைக்காரர்களும் விலக்கவந்தவன்பேரில் 'உமக்கென்னங் காணும் தெரியும்' என்று பாய, 'எனக்கும் சாப்பிடத்தெரியும்' என்று கோபத்துடன் அவர் சொல்ல, இந்தச் சண்டையை எப்படியாவது கலைத்துவிடவேண்டுமென்று நினைத்த ஒரு பெரியவர் அவர்களைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னார். 'வீணாக ஏன் சண்டை போடுகிறீர்கள்? ஒருவனுக்குச் சாப்பிடத்தெரிந்துவிட்டால் அவன் நல்ல கதியை அடைந்துவிடுவான். சாப்பிடத் தெரிந்தவன்தான் பெரிய வித்வான்' என்று சொன்னார். உடனே எல்லோரும் அவர் முகத்தைப் பார்த்தார்கள். அந்தப் பெரியவரும் அவர்களைப்பார்த்து புன்சிரிப்புடன் 'என்ன பார்க்கிறீர்கள்? என்று கேட்டார். உடனே அவர்கள், 'நீங்கள் சொன்னது ஆச்சர்யமாக யிருக்கிறது. பரிஹாஸம் செய்கிறீர்களா? அதற்கு ஏதாவது அர்த்தம் உண்டா? என்றார்கள்.

பெரியவர்—'உங்களோடு நமக்கு என்ன பரிஹாஸ மிருக்கிறது. வாஸ்தவமாகத்தான் சொன்னேன்' என்று சொன்னார். 'அப்படியானால் எங்களுக்குந்தான் தெரியவேண்டும் சொல்லுங்கோ பார்ப்போம்' என்று ஸம்மந்திகளும் சிலர் வந்து உட்கார்ந்தார்கள். பிறகு சண்டைக்காரர்களுக்கும் இதைக்கேட்க ஆவலுண்டாகிவிட்டது. பெரிய கூட்டத்தைப் பார்த்தவுடனே உத்ஸாஹத்துடன் சொல்லவாரம்பித்தார் அப் பெரியவர்.

ஓ ஸபையோர்களே! சாப்பாட்டினால்தான் மனிதர்கள் இவ்வுலகில் ஸுகமாக வாழ்வதோடு நல்ல கதியையும் அடைய முடியும். சாப்பிடுகிறதென்றால் எந்த வஸ்துக்களைச் சாப்பிடலாம், எந்த வஸ்துக்களைச் சாப்பிடகூடாது என்பதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். ஶாஸ்த்ரஸம்மதமான சுத்தமான ஆஹாரத்தைச் சாப்பிட்டால்தான் ஸத்வகுணம் வ்ருத்தியடையும். நல்ல கார்யங்களிலும் பகவானை த்யாநம் செய்வதிலும் புத்தியானது நிலைத்து நிற்கும். உடனே பாபங்கள்போய் நல்ல கதியை அடைகிறான். 'ஆஹாரஶுத்தௌ ஸத்த்வஶுத்தி: ஸத்த்வஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:। ஸ்ம்ருதிலம்பே ஸர்வக்ரந்தீநாம் விப்ரமோக்ஷ:॥' என்று ஶாஸ்த்ரம் முன்சொன்னவைகளைச் சொல்லுகிறது. இதைப்போல் ஒருவன் சாப்பிடக்கூடாதவைகளைச் சாப்பிட்டால் ரஜோகுணம் தமோகுணமென்கிற கெட்ட குணங்கள் வ்ருத்தியடைந்து செய்யக்கூடாத தப்புகார்யங்களைச் செய்து பாபியாகி நரகத்தையடைகிறான். நமக்கு நரகபர்யந்தமான கஷ்டங்கள் வாராமலிருக்கச் சாப்பிடக்கூடாத அநேகவஸ்துக்களுக்குள்ளே 'பால்'விஷயமாக (எந்தபால் சாப்பிடலாம் எந்தபால் சாப்பிடக்கூடாதென்பதை) முதலில் சொல்லுகிறேன். ஸந்தேஹம் வருகிற இடங்களில் கேள்விகள் கேட்கலாம்; தெரிந்தவரைக்கும் சொல்லுகிறேன்.

பிளவில்லாமல் ஒன்றாகஇருக்கிற குளம்புகளையுடைய ஜந்துக்களின் பாலைச் சாப்பிடக்கூடாது. அதாவது:— கழுதை, குதிரை முதலியவைகளின் பால். இரண்டு கன்றுகள் உள்ள பசு முதலான மிருகங்களின் பாலைச் சாப்பிடலாகாது. ஒட்டகத்தின் பாலாகாது. உப்பு' மோர் இவைகளுடன் கலந்த பால்

சாப்பிடலாகாது.

ஒருவர்-உப்புடன் கலந்தால் என்றால்...

பெ—பாலை மோர் என்றுஎண்ணிஒருவன் உப்பை அதில் போட்டானதும், அது பால் என்று தெரிந்தது. உடனே ஸாமர்த்யமாக உப்பை எடுத்துவிட்டாலும் அந்தபாலைச் சாப்பிடக் கூடாது என்று நன்றாகத் தெரிகிறது.

ஒரு—மோருடன் கலந்த பால் கூடாது என்றால் அது எப்படி? நன்றாகச் சொல்ல வேண்டும்.

பெ—(பொறுமையுடன் கேட்டதில் ஸந்தோஷத்துடன்) பாலைக்காய்ச்சி தயிராகச் செய்வதற்கு என்ன செய்கிறார்கள்? கொஞ்சம் மோரை அந்த பாலில் கொட்டுகிறார்கள். அதுதான் மோருடன்கலந்த பால். அதை தயிராக ஆவதற்குமுந்தி சாப்பிடக்கூடாது. அந்தப்பாலை தயிராக ஆவதற்குமுந்தி பார்க்கவும் கூடாது என்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். ஒழிந்தபோது வந்தால் ஶாஸ்த்ரங்களை எடுத்துக் காட்டுகிறேன்.

மற்றொருவர்—கழுதை, குதிரை, ஒட்டகம் முதலியவைகளின் பாலை எவன் சாப்பிடுவான்? என்னமோ சொல்லுகிறீர்களே.

பெ— கழுதையின் பால் சில வ்யாதிகளுக்குச் சாப்பிடவில்லையா? அதைப்போல், குதிரையின் பாலையும் ஒட்டகத்தின் பாலையும் தேஹவலுவுக்கு (சரீரத்தில் பலம் உண்டாவதற்கு) சிலர் உபயோகப்படுத்துகிறார்கள். மற்றும் சிலர் மருந்தாகவும் உபயோகிக்கின்றார்கள். எப்படியிருந்தாலும் இவைகளின் பால் ஸம்பந்தப்பட்டால் அதற்குள்ள ப்ராயச்சித்தம் செய்துகொள்ளாவிட்டால் பாபியாகவேயிருக்கிறான். பாபங்களுக்கு ப்ராயச்சித்தம் சொல்லுகிற ஹேமாத்ரி முதலிய க்ரந்தங்களை பார்த்தீர்களேயானால் உடம்பு நடுங்கும். மேலும் ஸ்திரீகளுடைய பாலைச் சாப்பிடக்கூடாது. அதனால் மஹாபாபம் உண்டாகும். ஸ்திரீகளுடைய பாலைச்சாப்பிட்டால் நரகத்தில் முதல் ஸிம்ஹாஸனம் அவனுக்குத்தான்.

ஒ-மூ— அப்படியானால் குழந்தைகளெல்லாம் சாகவேண்டியதுதானே?

பெ— (சிரித்துக்கொண்டு) ஆமாம்; அதனால்தான் அவ்வளவு பாபம் உண்டாகிறது.

ஸபையோர்கள் கரகோஷம் செய்தார்கள்.

மூட்டாளின் ஸ்நேஹிதன்— (இவ்வளவிலும் விஷயத்தைத் தெரிந்துகொள்ளாமல்) என்ன பெரியவரே எல்லோரும் கை கொட்டிப் பரிஹாஸம் செய்கிறார்களே? குழந்தைகள்தானே தாய்ப்பால் சாப்பிடும், அவைகளுக்கு பாபம் வந்துவிடும் என்றால் சாக வேண்டியதுதானே? ஸமாதானம் சொல்லாமல் என்னமோ நகைக்கிறீர்களே?

பெ— உமக்கு எத்தனை குழந்தைகள்?

மூ-ஸ்— என்னைப்பற்றி விசாரமில்லை; எனக்கு குழந்தைகள் பிறக்கவில்லை.

பெ— அப்படியாகில் உமக்கு இந்த விஷயம் தெரியாது.

மூ-ஸ்— நான் அவ்வளவு முட்டாளா? (என்று கோபித்துக்கொண்டார்.)

பெ— ஸபையோர்களே! குழந்தைகள் உள்ள ரஸிகஶிரோமணி யாராவது இவருக்கு பதில் சொல்லி ஸமாதானப்படுத்தக்கூடாதா? வயதான நான் இதற்கு பச்சையாக பதில் சொல்லுவது அழகல்ல என்று நினைக்கிறேன்.

சிலர் தலையை குனிந்துகொண்டார்கள்.

மேலும் விஷயம் சொல்லவாரம்பித்தார். பசு முதலியன கர்ப்பம் தரித்துவிட்டால் அவைகளின் பாலைச் சாப்பிடக்கூடாது. சில வைத்யர்களை விசாரித்தால் வ்யாதி உண்டாகும் என்று சொல்லுகிறார்கள். கன்று இல்லாதவைகளுடைய பாலைச் சாப்பிடக்கூடாது. வேறு பசுவின் கன்றுகளால் கறந்த பாலைச் சாப்பிடக்கூடாது. பசு ஏமாந்ததுபோல் இவனும் நல்ல கதியை அடையாமல் ஏமாந்துவிடுவான். இப்படியிருக்க, தோல் கன்றால் கறந்த பாலை சாப்பிட்டால் அவன் கதி என்னவாகும்? பாருங்கள்! தெருக்களில் தோல் கன்றை பசு நக்குகிறதும், அந்த பசு அழுதுக்கொண்டே பாலைச்சுரக்கிறதும், அதை கறக்கிறதும், அதை சாப்பிடுகிறதும் என்ன கஷ்டம்.

திரிந்துபோன பாலை சாப்பிடக்கூடாது. இதற்கு ஶாஸ்த்ரமே வேண்டியதில்லை. ஏதோ ஒரு கெடுதலால்தான் பால் திரிந்துபோயிருக்

கவேண்டும்; அந்த கெடுதல் உடம்பைக் கெடுத்துவிடாதா?

ஒரு துஷ்டன்— திரிந்த பாலை எவன் சாப்பிடுவான்?

பெ— கொஞ்சமாகத் திரிந்திருந்தால் பாயஸம் முதலியவைகளில் சேர்த்து விடுவார்கள். அதிகமாக திரிந்திருந்தால் திரட்டுப்பால் கிளரிவிடுவார்கள். எல்லாம் எந்தக்காரணத்தால் பால் திரிந்து விடுகிறது என்று தெரியாததாகையால் கெடுதல்தான். இதில் முக்யமான விஷயம் ஒன்று. முக்தி அடையவேண்டுமென்று எண்ண முடையவர்கள் கட்டாயம் சாப்பிடக்கூடாத பால் ஒன்று உண்டு. அதாவது:— பிடாரி, மாரி, துர்க்கை, காளி என்பது முதலான பேர்கள் வைக்கப்பட்ட பசுக்களுடையவும், அவைகளின் ஆயுதங்களான சூலம் முதலியவைகள் (சூடு)போட்ட பசுக்களுடையவும் பாலை சாப்பிடக்கூடாது.

ஒரு— லக்ஷ்மீ, கமலா என்றும், சங்கு சக்ரங்களையும் சூடுபோட்டிருந்தாலும் அதின் பாலை சாப்பிடலாமா?

பெ—ஜந்மாந்தரங்களில் நல்ல புண்யம் பண்ணியிருந்தால் அவர்களுக்கு அந்தமாதிரியான பால் கிடைக்கும்; நல்ல கதியையும் அடைவார்கள்.

வைஷ்ணவஸம்ப்ரதாயம்தெரியாதவராகவும், வேதாந்தம் படிக்காதவராகவும், தர்மஶாஸ்த்ரமாத்ரம் அறிந்தவரான

ஒருவர்—ஒ ஸ்வாமிந்! பகவான் தவிர இதர தேவதைகள்பேர் வைத்திருந்தாலும், இதரதேவதைகளின் அடையாளம் போட்டிருந்தாலும் அதுகளுடைய பாலைச் சாப்பிடக்கூடாது என்று சொன்னீர்களே இதற்கு ஶாஸ்த்ரம் காட்டமுடியுமா? ஒரு மாதம் உங்களுக்கு அவகாசம் கொடுக்கிறேன்.

பெ—(சிரித்துவிட்டு) ஒரு மாதம் எதற்காக அவகாசம்? இப்பொழுதே சொல்லுகிறேன். உம்மிடத்தில் ஶாண்டில்ய ஸ்ம்ருதியிருக்கிறதா? இருந்தாலும் அதில் மூன்றாவது அத்யாயத்தில் 127-வது ச்லோகத்தை வாசித்துப்பாரும். என்ன சொல்லியிருக்கிறது தெரியுமா?

'ருத்³ராதி³வ்யபதே³ஶின்ய꞉
யாஶ்ச கா³வஸ்தத³ங்கிதா꞉ ।
பயஸ்தாஸாமபேயம் ஸ்யாத்
க்ஷீரம் யச்ச ஸவிஷோ ப⁴வேத் ॥'

[சிவன் முதலான தேவதைகளின் பெயரை வைத்திருக்கிறதுகளாயும், அந்த தேவதைகளின் அடையாளங்களை போடப்பட்டதுகளாயுமுள்ள பசுக்களின் பாலைபகவதாராதனத்துக்கு உபயோகப்படுத்தக்கூடாது. விஷத்தோடு கூடின ஜந்துக்களின் பாலையும் உபயோகிக்கக்கூடாது] என்று. நன்றாகத் தெரிந்ததா?

அதே ஸ்ம்ருதியில் மேலும், கால்களைக் கட்டாமல் கறக்கும் பால், கன்றுபோட்டு பத்து தினங்களுக்குள் கறந்த பால், அகாலத்தில் கறக்கும் பால், வெங்காயம், உள்ளிப்பூண்டு, அமேத்யம் முதலியவைகளைத்தின்னும் பசு முதலிவைகளின் பால் இவைகளையும் சாப்பிடக்கூடாது என்று நிஷேதித்திருக்கிறார். செம்மறி ஆட்டுப்பால், ப்ராஹ்மணர்களிடத்தில் விலைக்கு வாங்கும் பால், செப்புப்பாத்ரத்தில் வைக்கப்பட்ட பால் முதலியவைகளையும் சாப்பிடக்கூடாது. ஸபையில் கேட்கவே அவருக்காக ஶாஸ்த்ரத்தில் ஒரு உதாஹரணம் காட்டினேன். இதேமாதிரி கீழ்ச் சொன்னவைகளுக்கெல்லாம்எத்தனை வசநங்கள் தர்மஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறதுகளோ எல்லா வசநங்களுடைய ஸாரமான அம்சங்களையும் திரட்டிநம் வேதாந்ததேசிகன் ஆஹாரநியமம் என்கிற ஒரு க்ரந்தம் தமிழ் பாசுரங்களால் செய்தருளியிருக்கிறார். அதில் இங்கு கீழ்ச்சொன்ன பால் விஷயமாக நாம் ஸுலபமாகத் தெரிந்துகொள்வதற்காக ஒரு பாசுரம் சொல்லியிருக்கிறார். அதை சொல்லிவிட்டு உபந்யாஸத்தை முடித்துக் கொள்கிறேன்.

ஒருகுளம்பி யிருகன்றி யொட்டகப்பால்
உப்புடன்பால் மோருடன்பால் மாதர் தம்பால்
கருவுடையவற்றின் பால் கன்றிலாப்பால்
மறுகன்றால் கறந்திடும்பால் திரிந்திடும் பால்
திருமகளார் கணவனலாத் தெய்வத்தின் பேர் [பால்
சின்ன முடையவற்றின் பால் செம்மறிப்

பரிவதிலந்தணர் விலைப்பால் செம்பினிற்
பால்
தீதாம்பாலிவையனைத்தும்பருகாப்பாலே.
(ஆஹாரநியமம்.17)

கீழ்சொன்னபடிதான் இந்த பாட்டுக்கு அர்த்தம்.

இந்த பாட்டை நன்றாக மனத்தில் ஜ்ஞாபகப்படுத்திக்கொண்டிருந்தால் சாப்பிடக்கூடாதபால்கள் நினைவுக்கு வரும். விடும்படி தோன்றும் கெடுதலை விட்டாலே நல்லகதியையடலாம். நாழிகை அதிகமாக ஆகிவிட்டபடியால் நிறுத்திக் கொள்கிறேன். வேறு ஒரு ஸமயத்தில் இன்னும் சாப்பிக்கூடாத வஸ்துக்களைச் சொல்லுகிறேன்.

ஸபையோர்கள்—எங்கள் அதிர்ஷ்டம் தான் நீங்கள் எங்கள் பந்துவாக இங்கு வந்தீர்கள். ஸ்ரீ அழகிய சிங்கர்களின் நியமனப்படி கல்யாணம் ஐந்து தினங்கள் நடக்கின்றபடியால் தினமும் கொஞ்சம் கொஞ்சம் சொல்லவேண்டும் ஸ்வாமிந்! நமஸ்கரிக்கிறோம் என்று சொல்லி பெரியவரை உபசரித்துவிட்டு, சிலர் பாட்டை எழுதிவாங்கிக்கொள்கிறார்கள். பிறகு ஸபையோர்கலைந்தார்கள்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம ஸபை, தேரழுந்தூர்.

ஷை ஸபையின் கிளைஸ்தாபனமாக அத்யாபக வேதபாராயண ஸமிதியார் உலகக்ஷேமத்தின்பொருட்டு இவ்வருஷமும் ஸ்ரீ ஆமருவியப்பன் ப்ரஹ்மோத்ஸவத்தில் உபயகோஷ்டிபாராயணுதிகளை நடத்தினர்.

26-5-51தேதி ஸ்ரீ அஹோபிலமடத்தில் 3-மணிக்கு ஷைஸமிதியார்களுடைய ப்ரார்த்தனையின்பேரில் ஸ்ரீ. உப. மஹாவித்வான், வங்கீபுரம் காளி ரங்காசார்யர்ஸ்வாமி வேதத்தின் பெருமையைப்பற்றியும் இக்காலத்தில் அத்யயநம் பண்ணினவர்களை பக்தி ச்ரத்தையுடன் ஆராதிக்கவேண்டும் என்றும் இந்த உபயகோஷ்டிகளும் ப்ரதிவருஷமும் இம்மாதிரி நன்றாக நடக்க இங்குள்ளோர் எல்லாரும் உதவிபுரியவேண்டும் என்றும் மிகவும் ரஸமாக உபந்யாஸம் செய்தார். பிறகு ஸ்ரீ. உப. மாடபூஷி, வி. ரங்காசார்யர் ஸ்வாமி ஸ்ரீ ஆமருவியப்பன் விஷயமான 'தந்தை காலில்' என்னும் பாசுரத்தைப்பற்றி மிக்க விரிவான முறையில் உபந்யாஸம் செய்தருளினர். (இந்த ஸ்வாமி சென்னை அரசாங்கத்தில் ஒரு உயர்ந்த பதவியிலிருந்துவருகிறார்.) பிறகு இந்த ஸ்வாமியைக்கொண்டுபாராயணகைங்கர்யங்களில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கு உசிதமான ஸம்பாவனையும் செய்துவைக்கப்பட்டது. சருக்கை கனபாடி ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி அங்கு எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுக்கு வந்தநோபசாரம் கூறியபின் ஸபை முடிவடைந்தது.

ஷை ஸபையின் ஆதரவில் 4-5-51லிருந்து 24-5-51 வரையில் நிகமம் உயர்தரபள்ளி ஆசிரியர் ஸ்ரீமான் எஸ். திருமலாசார் ஸ்வாமி எம்.ஏ., எல்.டி., கீதா உபந்யாஸம் செய்தருளினர். அநேக ப்ரமாணங்களைக்கொண்டு மிகவும் அழகாக செய்தருளினர். இதுவரை 12-அத்யாயங்கள்தான் முடிந்தது. மற்றவைகளையும் சொல்லிமுடிக்கும்படி ப்ரார்த்தித்தோம் சீக்ரத்திலேயே முடித்து வைப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

சென்ற 2-5-51ல் ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீந்ருஸிம்ஹஜயந்தி மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது. அன்று வடுவூர் கனபாடி கண்ணன் ஸ்வாமி 'ப்ரஹ்லாதசரித்ரத்தைப் பற்றியும், 3-5-51ல் 'பாதசரணுகதி'யைப் பற்றியும் வெகு அழகாக உபந்யஸித்தார். ஷைஸ்வாமிக்கு ஸபையார் ஸம்பாவனையும் செய்தார்கள்.

ஶ்ரீ:
ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

ப்ராத: ப்ரபுத்ய ஶிரஸாஞ்ஜலிம் ப்ரஸார்த்ய
ஸஞ்சிந்த்ய த்ருதிஸம்ஸ்க்ருதய: ஸ்வயாந்நா ।
க்ருத்வாஸ்வஹ்ருத்வரண ப்ரவணக்ஷமாதீந்
ப்ராணாஸுநா பகவதே வாஸுதேவாய தத்வே ॥

வ்யாபாரத் துறையில் வருஷ முடிவில் கணக்குப் பார்ப்பது (Stock taking) உண்டு என்பது நாமெல்லோரும் அறிந்த விஷயம். இதே போல் நம் ஆத்ம 'வ்யாபாரத்திலும்' ஒருவிதமான கணக்கெடுத்தலுண்டு. வ்யாபாரிகள் வருஷத்திற்கொருமுறையோ அல்லது ஆறு மாதங்களுக்கொருமுறையோ கணக்குகளைப் பார்த்து, வ்யாபாரம் தாங்கள்போட்ட திட்டப்படி நடந்து வருகிறதா என்றும் எதிர்பார்த்தபடி பலன் கிடைத்து வருகிறதா என்றும் பார்த்து, லாபநஷ்டங்களுக்குக் காரணமென்ன வென்பதை ஆராய்ந்து, லாபத்தைப் பெருக்கவும் நஷ்டத்தைச் சுருக்கவும் எந்த வழிகளைப் பின்பற்றலாமென்பதைக் காலதேசங்களுக்கநுகுணமாக நிர்ணயித்துக்கொள்ளுவார்கள். அப்படிச் செய்துகொண்ட நிர்ணயத்திற்குத் தகுந்தாப்போல் வ்யாபாரத்தை மேலும் தொடர்ந்து நடத்த ஆரம்பிப்பார்கள். வ்யாபாரம் பெரியதாயிருந்தால் மேற்சொல்லிய கணக்கெடுத்தல் மூன்று மாதங்களுக்கொருமுறை மதமொருமுறை என்று இப்படி அடிக்கடி நடைபெறுவதுமுண்டு.

கணக்கெடுத்தல்

நமது ஆத்மீக வாழ்வைவிட முக்யத்வம் வாய்ந்த வேறு 'வ்யாபாரமில்லையாகையால்' இந்த வ்யாபாரத்தில் தினந்தோறும் கணக்கெடுத்தாக வேண்டுமென்று நம்பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ப்ரதிதினமும் அதிகாலையில் (ப்ராஹ்ம முகூர்த்தத்தில்) படுக்கையை விட்டெழுந்து பகவானை ஸ்மரித்துவிட்டுத் தன்னையும் தன் நடத்தையையும் பற்றிச் சிந்திக்கவேண்டுமென்று ஆஹ்நிக விதியில் கூறப்பட்டிருக்கிறது. வங்கி வம்சேச்வராசார்யர் அருளிச்செய்த ப்ராதர்நிர்வேத காரிகைகளில் இதைப்பரக்கக் காணலாம்.

ஆத்மீக வாழ்ச்சி பெற நாம் செய்யவேண்டுவது என்ன? இவ்வளவு நாளாக — கணக்கற்ற ஜந்மங்களாக — நாம் செய்து வந்தது என்ன? அந்தக் கார்யங்களெல்லாம் நமக்கு நன்மை பயக்கக்கூடியனவா? அவை நன்மையைத் தரக்கூடியனவாயிருந்தால் நாம் ஏன் இன்னும் நன்மையை அடையவில்லை? நமக்கு எவ்வளவு வயதாயிற்று? இதற்குள் எவ்வளவு நல்ல கார்யங்களைச் செய்திருக்கிறோம்? எவ்வளவு கெட்டகார்யங்களைச் செய்திருக்கிறோம்? எதை உத்தேசித்து அந்த கார்யங்களைச் செய்தோமோ அது உண்மையில் நாம் அந்தவிதமாக நல்ல கார்யங்களையும் கெட்ட கார்யங்களையும் செய்து அவசியம் நம்மால் அடையப்படவேண்டியதுதானா? நமக்கு ஹிதம் எது? நமக்கு உண்மையான ஹிதத்தைச் சொல்லக் கூடியவர்கள் யார்? ஏன் நாம் அவர்களை அணுகி ஹிதத்தை உபதேசிக்கும்படி கேட்கக் கூடாது? நன்றாக உடை உடுத்தி ஸுகமாய் சாப்பிட்டுக்களித்துத் திரிவதுதானா இன்பம்? அவைகள் பூர்ணமாயிருப்பவர்கள் எல்லாரும் மனநிம்மதியுடன் வாழ்கிறார்களா? அவைகள் தானா உண்மையான சாச்வதமான இன்பம்? அதற்கு எவ்வளவோ மேம்பட்ட பேரின்பமில்லையா? அந்த இன்பத்தைக் கொடுப்பது யார்? அதை அடையும் வழி என்ன? நம் நடத்தையை எவ்வாறு சீர்திருத்திக்கொண்டால் அந்த பேரின்பத்தை எய்தலாம்? நேற்றிருந்ததைவிட இன்று நாம் எவ்வளவு முன்னேற்றத்தை யடைந்திருக்கிறோம்? என்றிவ்வாறு பல கேள்விகளைத் தமக்குள் கேட்டுக்கொண்டு அதற்கு

அந்தராத்ம ஸாக்ஷிகமாக பதில் சொல்லிக் கொண்டு நன்ருகச் சிந்தித்து நம் ஆத்மவிஷயமாய் நாம் செய்யவேண்டிய கார்யங்களைத் தீர்மானித்தலே ஆத்மவிஷயமான 'கணக்கெடுத்த'லுக்கு அவசியம்.

அப்படி பராமர்சிக்கும்போது 'ச்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட ஸதாசாரங்களை விட்டொழித்து மாஸ்த்ரவிருத்தமாயும் நம் ஸ்வரூபத்திற்கு விருத்தமாயுமுள்ள துராசாரங்களைப் பின்பற்றி இத்தனைநாள் எம்பெருமானுடைய வெறுப்புக்கு ஆளாகிவிட்டோமே! பெரியோர்களை அணுகி அடிபணிந்து தத்வார்த்தங்களைத் தெரிந்துகொள்ளாமல் போய்விட்டோமே! எம்பெருமானுடைய திருவடிகளை உண்மையான பக்தியுடன் அர்ச்சித்து அந்த ஆநந்தத்தை அநுபவிக்காமல் பொழுதை வீணில் கழித்தோமே! எம்பெருமானுடைய மெய்யடியார்களுடன் கூடிக்கலந்து பகவத்குணாநுபவம் பண்ணி நற்போதுபோக்காதொழிந்தோமே! என்ற நிர்வேதம் தலையெடுத்து நிற்கும். நிர்வேதத்திலேயே நின்றுவிடுவது ச்ரேயஸ்கரமாக ஆகாதாகையால் ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டு 'இனி சரியானபடி நடப்போம்' என்ற உறுதியைக் கைக்கொண்டு அந்த எண்ணம் நிறைவேறும்படி ஸங்கல்பிக்க வேண்டுமென்று எம்பெருமானை வேண்டிக்கொண்டு தினஸரிக் கார்யங்களைத் தொடங்க வேண்டுமென்கிறது ஆஹ்நிகவிதி.

இவ்வாறு தினந்தோறும் நம்மைப்பற்றி சிந்தித்து நடந்துவருவது நிச்சயமாய் நம்மை நல்வழிப்படுத்துமென்பதில் ஐயமில்லை. ஒரு திட்டம் (ப்ளான்) போட்டுக்கொண்டு அதன்படி கார்யங்களைச் செய்துவந்தால் கோரிய பலனை எளிதிலடையலாமென்பது யாவரும் தமது ஸொந்த அநுபவத்தில் கண்ட உண்மை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே

புஸ்தகங்கள் வரவு

மும்மணிக்கோவை:—

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்தது. திருவஹீந்திரபுரம் மஹாமஹோபாத்யாய, ஸ்ரீ தேசிகதர்சந விஜயத்வஜ, பண்டித பூஷண, பகவத்விஷய - சேட்லூர் நரஸிம்ஹாசார்யஸ்வாமி இயற்றிய விரிவான வ்யாக்யானத்துடன் கூடியது. இரண்டாம் பதிப்பு விலை ரூபாய் 1–0–0. கிடைக்குமிடம்:- சேட்லூர் ஸ்ரீநிவாஸமூர்த்தி ஐயங்கார், 2. கோதண்டராமர்கோவில் தெரு, மேல் மாம்பலம், மதராஸ்–17. (இந்தப்புஸ்தகம் திருவள்ளூரில் ஸ்ரீ அழகியசிங்கர்கள் ஸன்னிதியில் ஸமர்பிக்கப்பட்ட விஷயம் சித்திரை மீ ஸஞ்சிகையில் வெளிவந்திருக்கிறது.)

* = * * *

ஸம்ஸ்கிருத போதிநீ:-

(தேவநாகரி எழுத்து) சென்னை பச்சையப்பன்காலேஜ் ரிடையர்ட் ஸம்ஸ்கிருத பண்டிதர் வெ. அனந்தாசாரியர் இயற்றியது. விலை ரூபாய் 1-0-0. கிடைக்குமிடம் ராம்நாராயண்லால், புக் ஸெல்லர், கத்ராரோட், அலஹாபாத்.

199524